# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 2.] பெப்ருவரிமீ 1882. புஸ்த. XIII.

CONTENTS.

British Possessions in the Mediterranean .................... 25
The Disadvantages of hard Study in early Life ....... 28
A Blacksmith and a Tailor ...... 32
A Wonderful Machine ........... 40
The Earthquake of December 31st, 81 .................... 44
The Child's Corner .......... 47
News ............................ 50

அட்டவணை.

மத்தியதரைக்கடலில் அங்கிலேயருக்குள்ள ஆட்சிகள் ............ 25
வாலிபத்தில் வருந்தி வாசிப்பதினால் விளையும் தீமை .................. 28
தச்சனும் தையற்காரனும் ........ 32
அற்புதமான ஒரு மகா யந்திரம் .... 40
சென்ற டிசம்பர்மாசம் 31வ உண்டான பூகம்பம் ............... 44
சிறுவர்க்கான கதை .............. 47
சமாசாரம் ... .................. 50

MADRAS:
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

இந்த ஜநவிநோதிநியைப் படிப்பவர்களுக்கு

# அறிக்கை.

இப்பொழுது ஜநவிநோதிநியின் மற்ருெரு புதுப்புத்தகம் துவக்கமாகின்றதாதலால், இத்தருணத்தில் நாம் இப்பத்திரிகையை நன்குவரப் பெறும்படி அனைவரையும் வேண்டிக்கொள்வதுமன்றி, பருவங்கள் மாறி மாறி வந்தாலும், கூடியவரையில் இப்பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு இன்பமும் விநோதமும் உண்டாக்குகிற விஷயத்தில்மாத்திரம் நமது விருப்பம் மாருமல் நம்முடைய நிலையையே நாம் நாடிநிற்கிருேமென நினைப்பூட்டவும் விரும்புகிருேம். நம்மிடத்திலும், நாம் இயன்றவளவு பாடுபட்டுப் பிரசுரம்செய்கிற இப்பத்திரிகையினிடத்திலும் இதைப் படிப்பவர்கள் அபிமானமுற்றிருக்கிருர்களெனத் தெரிந்தால், அதுவே நமக்கு மேன்மேலும் முயற்சிசெய்யத் தூண்டுகோலாகும். ஒவ்வொரு மாதமும் நாம் ஜநவிநோதிநி பத்திரிகையில் சிறுவர் பெரியோரனைவர்க்கும் உபயோகமான விஷயங்களை வெளியிட்டுவருவோம்; அவற்றுள் வீடுகளில் விநோதமாய்ப் படிக்கத்தக்க பல இனியகதைகளும் வரும்.

இப்பத்திரிகையைத் தாங்கப் போதுமான உதவி இப்போது அவசியம் இதற்குத் தேவையாயிருக்கிறது. அவ்வுதவி கிடைக்கவேண்டிய வழி மூன்று: முதலாவது, முன்பணமாய்க் கையொப்பங்கள் வருவதும், சிறுவர்கள் மகிழ்ந்து கொண்டாடத்தக்க விநோதமான படங்களைத் தேடிக்கொள்ளும்படி விசேஷமான நன்கொடைகள் கிடைப்பதுமாம்; இரண்டாவது, நாடுகளிலும் நகரங்களிலும் இப்பத்திரிகை இன்னும் அதிகமாகப் பரவும்படி விசேஷமாய்ப் பிரசுரம் செய்வது; மூன்ருவது, இப்பத்திரிகைக்குத் தக்கதான விஷயங்களை எழுதியனுப்புவது.

சென்ற வருஷத்தில் இப்பத்திரிகைக்கு உபயோகமான சிறந்த விஷயங்களைப் பிரீதியாய் எழுதியனுப்பியவர்களிடத்தில் நாம் மிக்க நன்றிபாராட்டுகிருேம்; இவ்வருஷத்திலும் அப்படியே உசிதமான பல பத்திரிகைகள் நமக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கிருேம்.

MALTA.—மால்தா என்னும் தீவு.

# ஜநவிநோதிநி.

இல. 2.] பேப்ருவரிமீ 1882. [புஸ்த. XIII.

## மத்தியதரைக்கடலில் அங்கிலேயருக்கு உள்ள ஆட்சிகள்.

இப்பூமியில் எந்தப்புறத்திலும் தாங்கள் நூதனமாகக் கைப்பற்றின தேசங்கள் விசேஷமாய் இருக்கின்றனவென்பதைப்பற்றிப் பேச இங்கிலீஷ் ஜாதியாருக்கெல்லாம் மிகப் பெருமையாயிருக்கின்றது. அத்தேசங்களோடு ஒப்பிடுகையில் அவர்களுடைய சுய தேசமான மகா பிரித்தானியா பெருங்கடலில் ஒரு சிறுதிட்டுப்போலவேயாகின்றது. அதற்கு அதீனமாய் இருக்கின்ற இவ்விந்து தேசம் ஒன்றே அதைப்போலப் பன்னிரண்டுபங்கு பெரியதும், அதைப்போல எட்டத்தனை அதிகமான குடித்தொகையுடையதுமாய் இருக்கின்றதென்ருல், மற்றவைகளுக்குக் கேட்பானேன்? இவ்வளவு பெரிய ராஜ்யத்தை அதிக தூரத்தில் உடைய துரைத்தனத்தார் இதற்கும் அதற்கும் இடையிலுள்ள கடல்மார்க்கத்திலே படிப்படியாய்ப் பல ஸ்தானங்களைத் தம் அதீனத்தில் வைத்திருக்க வேண்டுமென்று எண்ணுவது இயற்கையேயல்லவா? அந்த நோக்கத்தினுலேயே அங்கிலேய துரைத்தனத்தார் சில வருஷங்களுக்கு முன்னே சூயஸ் கால்வாயில் நெடுந்தூரம் தமக்குச் சுவாதீனமாகச் செய்துகொண்டனர். இரண்டு வருஷத்திற்குமுன்னே துருக்கி தேசத்தாரோடு சமாதானம் செய்துகொண்டு மத்தியதரைக்கடலில் ஸைப்ரஸ் என்னும் தீவையும் கைப்பற்றினுர்கள்.

ஆதலின் இப்போது மத்தியதரைக்கடலிலே அங்கிலேயர்க்குள்ள முக்கியமான ஆட்சிகள் ஜிப்ரால்ட்டர், மால்தா, ஸைப்ரஸ் இவைகளாம். இவற்றின் சரித்திரவரலாற்றை ஒருவாறு சுருக்கமாய் அடியிலெடுத்துச் சொல்லுவோம்:

இவற்றுள் முதலில் கிடைத்தது ஜிப்ரால்ட்டராம். ஆதியில் அதன்மேல் படையெடுத்து அதைக் கைக்கொண்ட ஒரு வீரனுல் அதற்கு அப்பெயர் அமைந்தது. அம்முனையைக் கைக்கொண்ட

பிறகு அந்த வீரன் அங்கொரு கோட்டைகட்டிக் காப்பாற்றிவந்தான். பின்பு பல மாறுதல் உண்டானாலும் கடைசியில் 1462-ஷூத்தில் ஸ்பானியா தேசத்தார் அதைப் பிடித்துக்கொண்டு அதுமுதல் 1704-ஷூ வரையில் எவ்விதமான இடையூறுமின்றி அதை ஆண்டுவந்தார்கள்.

அப்போது அந்தக் கோட்டை மற்றெவராலும் பிடிக்கத்தக்கதல்லவென்று உறுதியாய் எண்ணப்பட்டிருந்தாலும், அங்கே காப்புச்சேனை மிகவும் சொற்பமாயிருந்த தருணங்கண்டு அங்கிலேயர் அதைக் கைக்கொண்டார்கள். ஆயினும் அது எளிதில் முடியவில்லை; உயிர்ச்சேதம் அநேகமாய் நேரிட்டபிறகுதான் கூடிவந்தது.

அன்றுமுதல் இன்றுவரை இங்கிலீஷ் கொடியே அந்தக் கோட்டையில் கம்பீரமாய் ஆடிக்கொண்டிருக்கிறதென்றாலும், அதை அவர்கள் அதீனத்தினின்றும் பறித்துக்கொள்ளப் பலபேர் பாடுபட்டார்கள். அதுமுதல் 80 வருஷம்வரையில் ஸ்பானியா தேசத்தார் அதற்காகப் போராடிக்கொண்டேயிருந்து கடைசியில் பிராஞ்சு தேசத்தாரோடுகூட வந்து எதிர்த்து அளவற்ற படையையும் பொருளையும் தோற்றார்கள். இவ்விதமாக அங்கிலேயரால் பிடிபட்ட அந்தப் பெருங்கோட்டையானது இப்போது, அந்தக் கடல்வழியை அவர்கள் கைக்கொண்டிருக்குமளவில், மற்றெவர்க்கும் எட்டிப்பார்க்கவும் கூடாததாய் இருக்கின்றது.

இதற்குப்பிறகு மத்தியதரைக்கடலில் அங்கிலேயர்க்குக் கிடைத்த காணியாட்சி மால்தா என்னும் தீவாம். ஜிப்ரால்ட்டர் செய்யமாட்டாத உதவிகள் அனைத்தையும் இந்தத் தீவு செய்கின்றது. சிறந்த கப்பல் ரக்ஷணஸ்தானமும் உறுதியாய் நங்கூரம் பாய்ச்சத்தக்க விடமுமுடையதாகி மால்தா மத்தியதரைக்கடலிலுள்ள கப்பற்சேனைகளுக்கெல்லாம் மத்தியஸ்தானமாய் இருக்கின்றது. அங்குள்ள நிலமும் பாழ்நிலமன்று: கோதுமை, வாற்கோதுமை, பருத்தி, புல்முதலியவைகள் அங்கே செழிப்பாய்ப் பயிராகின்றன; ஆடுமாடுகளும் விசேஷமாய் வளர்க்கப்படுகின்றன.

அந்தத் தீவின் சரித்திரம் நெடுங்காலமாகத் தெரியவருகின்றது. கிறிஸ்து பிறக்க 736 வருஷங்களுக்குமுன்னே அந்தத் தீவு கிரேக்கருடைய அதீனத்தில் இருந்தது. பின்பு ரோமாபுரியாருடைய அதீனத்திற் சேர்ந்தது. அந்த ஆதிகாலத்திலும் அது பல கைத்தொழில்களில் பிரசித்திபெற்றிருந்தது.

பிறகு அது கிரேக்கர், அரேபியர், சிசிலியர், ஜர்மானியர், பிராஞ்சுக்காரர் முதலாய்ப் பல தேசத்தாரால் பிடிபட்டு அவரவருடைய அதீனத்தில் சிறிதுகாலம் இருந்தது. கடைசியில் ஜர்மனி தேசத்தரசன் அதை ஒரு வீரனுக்கு ஒப்புவித்தான். அவ்வீரனும் அங்

கே சிறந்த கோட்டையொன்று கட்டிக்கொண்டு கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாக நன்மை விளைவித்துக்கொண்டு வந்தான். பின்பு 1798-ஷூத்தில் நெப்போலியன் என்னும் மகாவீரன் அதன்வழியாய் எகிப்துதேசத்துக்கு யாத்திரைபோனபோது அவன் கொடுத்த திரண்ட பரிதானத்தைப் பெற்றுக்கொண்டு மால்தாவில் இருந்த வீரர்கள் அதை நெப்போலியன் வசம் ஒப்புவித்தார்கள். நெப்போலியனும் அந்தக் கோட்டையில் 3000 வீரரைக் காப்புச்சேனையாக வைத்துவிட்டு அப்புறம் போயினன்.

ஆயினும் அந்தப் பிராஞ்சுக்காருடைய பெருங்கொள்ளையைப் பொறுக்கமாட்டாமல் அவர்களிடத்தில் வெறுப்பும் விரோதமுங் கொண்டு அந்தத் தீவிலுள்ளவர்கள் அந்தத் துரைத்தனத்தார்மேல் கலகப்பட்டு எழுந்து அங்கிலேயருடைய உதவியால் அங்கிருந்த காப்புச்சேனையை வென்றார்கள். பின்பு பிரித்தானியரே அந்தத் தீவைக் கைப்பற்றினார்கள்.

இப்போது அந்தத் தீவிலே பிரித்தானியருடைய நிலையான காப்புச்சேனைகள் இருக்கின்றன. மேலும் அங்கே விசேஷமான ஆயுதசாலைகளும் கப்பல்செய்யுமிடங்களும் இருக்கின்றன. அவ்விடம் கப்பற்சேனை தரைச்சேனை இரண்டுக்கும் பத்திரமான இருப்பிடமாம். நமது துரைத்தனத்தாரான பிரித்தானியர்க்கு மத்தியதரைக் கடலில் முக்கியஸ்தானமாயிருக்கின்ற இந்த மால்தாதீவின் காட்சிப்படத்தையே இச்சஞ்சிகையுடன் சேர்த்தனுப்பியிருக்கிறோம்.

கடைசியாய்ச் சிலநாளைக்குமுன்னே பிரித்தானியர்க்குக் கிடைத்தது ஸைப்ரஸ் என்னும் தீவாம். ஆதியில் இது பொனீஷியன்ஸ் என்பவர்களுக்கு அதீனமாயிருந்து, பிறகு கிரேக்கர், எகிப்து தேசத்தார், பாரசீகதேசத்தார், ரோமர், அரேபியர் முதலியோர்க்கு அதீனமாயிற்று. 1191-ஷூத்தில் அந்தத் தீவார் செய்த அக்கிரமங்களைப் பொறாமல், அப்போது இங்கிலாந்து அரசனாயிருந்த ரிச்சார்டு என்பவன் அதைப் பிடுங்கிக்கொண்டு, பிறகு அவனே அதை தெம்ப்லர்ஸ் என்பவர்க்கு விற்றுப்போட்டான். பின்பு பல மாறுபாடுகளுண்டாகிக் கடைசியில் அது துருக்கர்களுக்குச் சுவாதீனமாகிவிட்டது. அவர்கள் அதீனத்திலேயேயிருந்து இப்போது சிலநாளைக்குமுன் ருஷியருக்கும் துருக்கியருக்கும் போர்நடந்து சமாதானமாகும்போது ஒரு உடன்படிக்கையின்மேல் அது பிரித்தானியர்க்கு அளிக்கப்பட்டது. அந்தப் பூமி மிகவும் செழிப்பானது. முன்னே பத்துலக்ஷம்வரையில் அந்தத் தீவிலே குடிகள் அடர்ந்திருந்தனர். ஆயினும் பிறகு கொடுங்கோன்மை முதலியவற்றால் அது வெகுவாய்க் குறைந்துபோயிருக்கின்றது. அங்கே மிகவும் சிறந்த பருத்தி, பழவகை, நெற்பயிர், புகையிலை, ஆட்டுரோமம், பாலாடைக்கட்டி, பட்டு, ஒயின் என்னும் சாராயம், திராக்ஷைமுத

லியவை உற்பத்தியாகின்றன; காடுகளில் சிறந்த மரங்களும் வளர்கின்றன.

பூர்வகாலத்தில் அங்கே சிறந்த செம்புக்கனிகள் இருந்தன. பொன் வெள்ளி இரும்பு வைரக்கல் முதலிய ரத்தினம் இவைகளும் அகப்பட்டுக்கொண்டிருந்தன. இப்போது வருஷந்தோறும் அங்கிருந்து உப்பு ஏற்றுமதியாகின்றது. கம்பளம், பருத்தி, தோல் முதலிய கைத்தொழில்களும் அங்கே நடந்தேறுகின்றன.

## வாலிபத்தில் வருந்தி வாசிப்பதனுல் விளையும் தீமை.

மிகச் சிறுபொழுதிலேயே சிறுவர்கள் வெகு வருந்தி வாசிக்கப் புகுவதனுல் விளைகின்ற கெடுதி மிகவும் அதிகம். பிஞ்சிலே பழுப்பது உடனே அழிந்துபோம். இந்த நீதியை, பிஞ்சிலே பழுத்தவன் என்று இகழ்ந்துபேச, நாம் உலகத்தில் வெகுவாய்க் கேட்டிருக்கிறோம். மனிதர்க்குப் புத்தியானது ஈசுவரனுடைய அற்புத சக்தியால் அமைந்திருக்கின்றதென்பது ஏறக்குறைய எல்லோர்க்கும் தெரியும். ஆயினும் அது விகஸிக்கும் குணமுடையதென்பதும், காலக்கிரமத்தில் மெதுவாகவே கொஞ்சங்கொஞ்சமாய் மலர்ந்து கடைசியில் அனைவரும் அதிசயிக்கும்படி மிக்கமேன்மை பெறத்தக்கதென்பதும் சிலர்க்குமாத்திரமே தெரியும். புத்தியானது ஒரு தாமரைமலரைப்போல முதலில் கெட்டியாய் மலராத வாதனையற்ற முகிழாயிருந்து நாளளவிலே நன்றாய்ச் செழித்து மலர்ந்து பரிமளமுள்ளதாகும். விகஸிக்கும் பருவம் வருவதற்குமுன்னமே வேண்டுமென்று விகஸிக்கச் செய்த மலரானது அழகு வாதனை யொன்றுமில்லாமல் இரண்டொருதரம் கை படுவதற்குமுன்னமே வாடிவதங்கிப்போய்விடும்; பருவம் வந்து தானுக மலர்ந்த மலரோ அப்படியன்றித் தானிருக்குமளவும் நல்ல வாதனையும் அழகும் உடையதாகி எல்லோரும் கண்டுகளிக்கத்தக்கதாய் இருக்கும். புத்தியும் இத்தன்மையானதுதான். சிறுவர்களுடைய புத்தி தக்க வயது வருவதற்குமுன்னமே மலர்ந்துபோமானுல், அவற்றுள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பிஞ்சிலே பழுத்தவையாகிப் பயனற்றாகிலும் அழிந்தாகிலும் போகின்றன. மன்னுயிர்களுக்கு வாலிபம் யௌவனம் கௌமாரம் என்றிப்படிப் பல பருவங்களிருப்பதுபோல மானிடருடைய புத்திக்கும் பல பருவங்கள் உண்டு. புத்தியானது அவனவனுடைய இஷ்டப்படி ஆட்டத்தக்கதான கருவியன்று. புத்தியாவது ஓர் அற்புதமான யந்திரம். அதைச் சீர்திருத்திக் கையாளவேண்டிய வழி இன்னதென்பதைக் கண்டறிந்து அதன்படி நாம் அதை உபயோகிக்கவேண்டுமேயொ

ழிய நம்மிஷ்டப்படி ஆட்டலாகாது. மனிதருடைய அறிவு விவேகம் யுக்தி ஆலோசனைமுதலிய எல்லாவற்றிற்கும் புத்தியே பிறப்பிடமாம். புத்தியில்லாத மனிதன் பாழ். இவ்வுலக வியாபாரங்களை யோசிக்கையில் புத்தியில்லாவிட்டால் மனிதன் எதற்கும் உதவான். ஆயினும் இக்காலத்தில் மிகச் சிறு பிராயத்திலேயே பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிக் கூடிய சீக்கிரத்தில் படித்துப் பண்டிதர்களாக்கவேண்டுமென்னும் எண்ணம் இத்தேசத்தார்க்கு உள்ளதுபோல முக்கியமாய்ப் பாரசீக தேசத்தார்க்கும் இருக்கின்றது.

இக்காலத்தில் இத்தேசத்துப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் சரிதை எப்படிப்பட்டதெனில், பிள்ளைகள் வெகுவாய் ஐந்தாறு வயதிலேயே படிக்கப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அப்பிள்ளைகள் நாள்தோறும் காலையில் ஏழெட்டுமணிக்கே பள்ளிக்கூடம்போய் அது தொடங்கி மாலை நாலைந்து மணிவரையில் அங்கேயே அடைபட்டிருந்து அங்கே படித்த பல விஷயங்களையும் தாங்கமாட்டாமல் தாறுமாறாய்ப் புத்தியிலேற்றுக்கொண்டு தெளிவில்லாமலே மாலையில் வீட்டுக்குவருகிறார்கள். வீட்டுக்குவந்தபின்பு அங்கேயும் சும்மா இராமல் பகலில் படித்த புத்தகங்களை எடுத்துச் சொற்பவேதனத்தில் ஏற்படுத்திய ஒரு தனி உபாத்தியாயர் அல்லது இன்னும் யாராவது ஒருவருடைய முன்னிலையில் இராத்திரி நெடுநேரம் வரையில் அப்பாடங்களை உருப்போடுகிறார்கள். அந்தக் கவலையால் படுத்தபிறகு நித்திரைகூட அவர்களுக்கு நிம்மதியாய் வருவதில்லை. அப்படிச் சிறிதுநேரம் படுத்திருந்து மறுபடியும் அப்பிள்ளைகள் அந்தக் கெட்ட பாடசாலையையும் கொடிய உபாத்தியாயரையுமே நினைத்துக்கொண்டு காலையில் எழுந்து அவ்வுபாத்தியாயரிடத்தில் உள்ள பயத்தினால் சோறுகூடச் செம்மையாய்ப் புசிக்கத் தோன்றாமல் எப்படியாவது பள்ளிக்கூடத்திற்குப் போனாற்போதுமென்று ஓடுகிறார்கள். இப்படியே நாள்தோறும் நடந்துவருகின்றது. இதனால் அச்சிறு பையன் நோய்பிடித்துத் தேகம் மெலிந்து கவலையற்றவனாகி, தனக்கு இயற்கையாய் அமைந்த புத்தி விவேகம் ஊக்கம் முதலியவற்றையும் நாளளவில் இழந்துபோகிறான். இப்படிப்பட்ட துரதிர்ஷ்டப் பிள்ளைகளின் பெற்றோர்கள் நல்ல காற்றுக்காக மாலைவேளையில் கடலோரத்துக்கும் தோட்டங்களுக்கும் போய் இளைப்பாறிவர, பிள்ளைகள்மாத்திரம் பள்ளிக்கூடத்துப் புத்தகங்களோடு மண்டையை உடைத்துக்கொள்ளுகிறார்கள். தங்களுடைய அருமை மக்களை இப்படி வருந்திக்கொண்டிருக்கவிட்டுத் தாங்கள்மாத்திரம் நல்லகாற்றை அனுபவித்து உல்லாசமாய் இளைப்பாறுகிற பெற்றோர்களைக் கேவலம் சுயப்பிரயோஜனத்தையே நாடுகிறவர்களென்று சொல்லாமல் மற்றென்னென்று சொல்லலாம்? ஆயினும் இவை சிலகாலமாய் எந்தப்பக்கத்திலே பார்த்தாலும்

அபரிமிதமாகத் தோன்றியிருக்கும் பள்ளிக்கூடங்களால் விளைந்த கெடுதியேயொழிய வேறல்லவெனத் தோன்றுகிறது. அப்பள்ளிக்கூடங்கள் இல்லாவிடின் பிள்ளைகள் இளமையில் இப்படி வருந்துவதற்கு இடமேது? ஆயினும் இப்போது சிறிதுகாலமாய் விவேகிகள் இவ்விஷயத்தை ஆலோசித்துப் பிள்ளைகளுக்குப் புத்திப்பயிற்சியோடுகூட விளையாட்டும் தேகப்பயிற்சியும் செய்துவரும்படி முயன்றுவருவதைக் கேட்கக் கொஞ்சம் திருப்தியுண்டாகிறது.

சரீரம் நோயற்றுச் சுகமாயிருப்பவர்களுக்குத்தான் மனமும் நோயற்று நிம்மதியாயிருக்கும். சிறுபிள்ளைகள் விஷயத்தில் இது மிகவும் முக்கியமானது. மேற்சொல்லியவாறு வளருகின்ற பிள்ளைகளுக்கு வரவரத் தேகம் மனம் இரண்டும் துர்ப்பலமாய்ப்போவதனுல், அவர்கள் புத்தியில் கிரகித்துக்கொண்டிருக்கும் விஷயங்கள் இப்பூமியில் சிறிதும் உபயோகப்படத்தக்கவையல்லவாம். சில காலமாகத்தான் இரண்டோரிடங்களில் தேகப்பயிற்சி விளையாட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றிற்பயிலாத பேதைப் பிள்ளைகளுக்கு இயற்கையாயுண்டான சரீரசுவாதீனம், ஊக்கம், ஆண்மை, தைரியம் முதலியவைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது. கடைசியில் வயதுவந்தபிறகு இப்பிள்ளைகள் உலகத்தார்க்குமாத்திரமேயன்றித் தமக்குத்தாமும் பிரயோஜனமற்றவராகிருர்கள். சில பிள்ளைகள் சோம்பலும் மந்தபுத்தியும் உடையவர்களாகி எதற்கும் உபயோகமற்று, பிஞ்சிலே பழுப்பது, அளவுகடந்து உழைப்பது இவற்ருல் உண்டாகும் தீமைக்கு முதல் நிதர்சனமாகிருர்கள். இக்காலத்திலுள்ள பெற்ருேர்களுடைய முக்கியமான கோரிக்கை என்னவென யோசிக்கையில், தம்முடைய பிள்ளைகளைச் சீக்கிரமே உலகவியாபாரங்களில் நுழைத்து மற்றப் பிள்ளைகளுக்குமுன்னமே விசேஷமாய்ப் பொருள் சம்பாதித்துத் தனிகராகும்படி செய்ய வேண்டுமென்பதேயெனக் காண்கின்றது. பிற்காலத்தில் உத்தியோகம் செய்வதற்குவேண்டிய பரீக்ஷைகளுக்குப் போதுமான பாடங்களைப் படிப்பதே பிள்ளைகளுடைய தலைவிதியென்று அவர்கள் எண்ணியிருக்கிருர்கள்.

கல்விப்பயிற்சி செய்விப்பதின் முக்கியமான நோக்கமாவது, புத்தியை நன்ருக மலரச்செய்து, கம்பீரமும் பெருமையும் உறுதியும் உல்லாசமும் உண்டாக்கி, அதின் திறமைகளை மெல்ல மெல்ல விளையாட்டிலேயே விளங்கச்செய்யவேண்டும் என்பதேயொழிய, நோய், ஆயாசம், அளவுகடந்த உழைப்பு இவையாகிய புழுக்களால் முகிழிலேயே நசுக்கி அழித்துவிடவேண்டுமென்பதல்ல. புத்தியாகட்டும் தேகமாகட்டும், இப்பூமியில் உற்பத்தியாகும் பல பொருள்களைப்போலத் தாளுகவே வருந்தாமல் வளரவேண்டும். மேற்பார்வைக்குப் பயன்படத்தக்கவர்கள் அல்லவெனத் தோன்றினும், காரியசித்தி பெறவேண்டுமென்னும் மனவுறுதியோடு மெது

வாய்ப் படிக்கின்ற பிள்ளைகளே வாழ்நாளில் உண்டாகும் பல சங்கடங்களுக்கும் ஈடுகொடுத்துச் செம்மையாய்க் காலங்கழிப் பார்கள். இதென்ன உற்பாதமென்று காண்போர் வியக்கும்படி மிகத் துடியாயிருக்கின்றவர்களோ சீக்கிரமே சீரழிந்துபோவார் கள். புத்தியாவது சாமான் கொண்டுபோகும் ஒருகித்தான் பை போன்றது. வழியில் நேர்ப்படுகிற பொருள்களையெல்லாம் ஒன்று கூடவிடாமல் வாங்கிப்போட்டு அந்தப் பையை நிரப்பிக்கொண் டே போவோமானால், அந்தக் கித்தான் எவ்வளவு கனமாயிருந் தாலும் கிழிந்து அதிலுள்ள சாமான்களெல்லாம் நாற்புறமும் சிந் திப்போம்படியாகுமல்லவா? புத்தியும் அப்படிப்பட்டதுதான். சிறி யவர்களாகட்டும் பெரியோராகட்டும், சிறிது சிறிதாய்ப் படித்த விஷயங்களை விநோதமாகவே சிந்தனைசெய்து புத்தியில் தாரணம் செய்துகொள்வார்களானால், மிகுந்த நன்மையுண்டாகும்.

கள்ளங்கவடற்று விநோதமாய் விளையாடுகிற காலம் இளமைப் பருவமே. அவ்விளமைப் பருவத்தில் பாலகர்களைப் பள்ளிக்கூடத் துக்கு அனுப்பாமல் வீட்டிலேயே கல்விப்பயிற்சி செய்வித்தால் அப்பிள்ளைகள் பிற்காலத்தில் மிகவும் வல்லவர்களாவார்கள். ஆத லால் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் படிப்பிப்பதைப் பார்க்கி லும் இவ்வீட்டுப் பயிற்சியையே பெற்றோர் முக்கியமாய்க் கவனிக் கவேண்டும். ஐந்தாறு வயதுமுதல் பதினான்கு பதினைந்து வய துக்குள் வீட்டு வழக்கத்தினால் பிள்ளைகளுடைய புத்தியில் என்ன உறுதிப்பாடு உண்டாகின்றதோ அதன்படிதான் பிற்காலத்தில் அப் பிள்ளைகளுக்குச் சுகதுக்கங்களும் நீதிநல்லொழுக்கங்களும் இவ்வு லக வாழ்க்கையும் அமையும். ஆயினும் அதைக் கவனியாமல், அவ் விளமைப் பருவத்தில் நீதிநல்லொழுக்கங்களையும் தேகப்பயிற்சி யையும் செய்விப்பதைவிட்டுக் கேவலம் சாதாரணமான புத்திப் பயிற்சிமட்டுமே செய்விக்கிறார்கள். நல்ல உபதேசங்களைப் பார்க் கிலும் நல்ல நிதர்சனமே முக்கியமாய் இளமைப்பருவத்தில் மிக்க உபயோகப்படுமெனச் சென்ற சஞ்சிகையிற் சொன்னோமல்லவா? செடியில் வணங்காதது மரமாய் வணங்காததால், செடியிருக்கிற சீர்மைக்குத் தக்கபடிதான் மரம் மேன்மைபெற்றிருக்கும். ஆதலால் ஒன்றுமறியாத இளமைப்பருவத்தில் பிள்ளைகளை நல்வழியிற் பயிற் றுவது பெற்றோர்களுடைய கடமை. ஆயினும் அறியாமை அஜாக் கிரதைமுதலிய காரணங்களால் அநேகர் இதை முக்கியமாய் உபே க்ஷை செய்கின்றனர். வாலிப வயதில் பிள்ளைகளுடைய தேகமும் மனமும் எவ்விதமாய்ப் பயிற்றப்படுகின்றனவோ அதற்குத் தக்க படிதான் பிற்காலத்தில் உலகவாழ்க்கைக்குரிய யோக்கியதையும் பெருமையும் அமையும். எல்லாவற்றிற்கும் தேகமே முதற்காரண மாதலால் அதன் வலிமை குன்றினால் அதைச் சார்ந்த மற்றவைக ளின் வலிமையும் குன்றிவிடும். ஆனதுபற்றியே இப்போது அங்

கிலேய துரைத்தனத்தார் புத்திப்பயிற்சியோடுகூடத் தேகப்பயிற்சியும் இன்றியமையாததெனத் தெரிந்து அவ்விரண்டுக்கும் ஏற்ற உபாயங்களைத் தேடிவருகின்றனர். பிள்ளைகளை வாலிப வயதில் மிக்க நிர்ப்பந்தமான படிப்பு வீட்டுவேலை முதலியவைகளைச் செய்யும்படி கண்டிக்காமல் அவர்கள் இஷ்டப்படியே வினோதமாக விளையாடவிட்டு, அவற்றோடு நீதிநல்லொழுக்கங்கள் பழகும்படிக் கண்காணித்து வரவேண்டும். இப்படிச் செய்துவருவோமானால் பிறகு அப்பிள்ளைகள் தாமே நல்வழியிற் புகுந்து யுக்தி ஆலோசனை சாமர்த்தியம் விடாமுயற்சி முதலிய நற்குணங்கள் பொருந்தி மேன்மை பெறுவார்கள். ஆனால் பிள்ளைகளைப் படிப்பிக்கச் சரியான ராஜமார்க்கமொன்று இல்லையென்பது மெய்யே. ஆயினும், பெற்றோரும் உபாத்தியாயர்களும் பிள்ளைகளின் தன்மையை அறிந்து அதற்குத் தக்கபடி புத்திப்பயிற்சியோடு தேகப்பயிற்சியும் செய்வித்து நல்வழிக்குக் கொண்டுவருவார்களானால், அப்பிள்ளைகள் பிறகு யோக்கியர்களாய் மேன்மைபெற்று வாழ்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

## தச்சனும் தையற்காரனும்.

(ஒரு கதை.)

பெருமலையும் பாதாளமும் ஒருபோதும் ஒன்றாய்ச் சேராவென்பது மெய்யே. ஆயினும் ஒன்றுக்கொன்று அவ்வளவு விரோதமுள்ள கெட்டகுணமும் நல்லகுணமும் உடையவர்கள் விடாமல் ஒருவரையொருவர் சந்திக்கக் கண்டிருக்கிறோம். அப்படியே ஒரு சமயத்தில் யாத்திரைபோயிருந்த ஒரு தச்சனும் தையற்காரனும் ஓரிடத்தில் சந்தித்தார்கள். தையற்காரன் தன்னால் இயன்றவளவு நன்மையே செய்யும் மனநற்குணமுடையவனாகிக் களிப்பும் விளையாட்டுமுடையவனாய் இருந்தான். அவன் தனக்கு எதிராகவந்த தச்சனைக் கண்டு அவன் கையிலிருந்த அடையாளத்தினால் அவனுடைய தொழில் இன்னதெனத் தெரிந்துகொண்டு, ஐயா நீர் இதுவரையில் எத்தனை மரம் அறுத்திருப்பீர்? எத்தனை வீடு இடித்திருப்பீர்! எத்தனை ஆணிகள் அடித்திருப்பீர் என்றான். தச்சன் அதைப் பரிகாசமென்று கொள்ளாமல், தன்னிடத்தில் நட்பாகவே பேசுகிறானென்றெண்ணிச் சரியாகவே சமாதானம் சொன்னதைக் கேட்டுத் தையற்காரன் நகைத்து, ஆயின் வாருமையா! நாம் இருவரும் குளக்கரைக்குப் போய்க் கட்டுச்சோறு உண்போம் என்றான். அப்படியே அவ்விருவரும் அங்கிருந்த ஒரு குளத்தண்டைக்குப் போய்த் தையற்காரன் கையிலிருந்த உணவைப் புசித்தார்கள். பிறகு தச்சன் தையற்காரனைப் பார்த்து, ஐயா, நான் உம்மிடத்தில் அதிக

கோபங்கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் தாறுமாறாய்ப் பேசுவதற்கிருந்தேன். வயிறு குளிர்ந்தால் எல்லாம் குளிர்ந்துபோமல்லவா? அதனால் புசித்தபின்பு இப்போது எல்லாம் தணிந்துபோயிற்று. இனி நாம் இருவரும் ஒன்றாய்க்கூடி யாத்திரைபோவோமா என்றான். அதுகேட்டுத் தையற்காரன், ஆகா, அப்படியே செய்வோம். வேலைசெய்யவேண்டுமென்று அபேக்ஷிப்பவர்களுக்குக் குறைவில்லாமல் வேலை அகப்படுகிற ஒரு பெரிய பட்டணத்துக்குப்போக உனக்கு விருப்பமானால் நான் அப்படியே வரச் சித்தமாயிருக்கிறேன் என்று சொல்ல, அதைக் கேட்டுத் தச்சன், அத்தன்மையான இடத்துக்குப் போகவேண்டுமென்பதுதான் என்னுடைய இஷ்டமும். பக்ஷி ஒரு கூட்டுக்குள்ளேயே உட்காந்திருந்தால் அவ்விடத்தில் அது என்ன சம்பாதித்துக்கொள்ளமாட்டும்; அப்படியேதான் ஒரு சிறு கிராமத்திலும்; அங்குள்ளவர்கள் மேஜை நாற்காலிமுதலிய சாமான்களில்லாமலே தங்கள் வேலைகளை நடத்திக்கொள்வார்கள். ஆதலால் ஒரு பெரும்பட்டணத்துக்குப் போவதே நல்லது என்று சொல்ல, அவ்விருவரும் உடன்பட்டு அங்கிருந்து அப்புறம்போக எத்தனித்தார்கள்.

அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக் காடு மலை வனாந்தரங்களைக் கடந்து அவர்கள் நெடுந்தூரம் நெடுநேரம் போனார்கள். ஆனாலும் கையில் புசிக்கப்போஜனம் சிறிதளவுகூட இல்லாமல் மிகவும் வருந்திக்கொண்டு கடைசியில் ஒரு பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அப்பட்டணத்தில் அவர்கள் உணவுக்காக ஏதாவது ஒரு வேலை அகப்படுமாவென்று பக்கத்துக்கு ஒருவராய்ப் போய்ச் சுற்றுகையில், தையற்காரன் அதிக சுறுசுறுப்பும் களிப்பும் விளையாட்டுமுள்ள ஒரு சிறுவனாயிருக்கக்கண்டு, ஒவ்வொருவரும் அவரவர்க்குக் கிடைத்ததை அவனுக்குக் கொடுத்தார்கள். அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு அவன் தன் தோழனோடுவந்து கூடினான். தையற்காரனுடைய மூட்டை தச்சனுடைய மூட்டையைவிட மிகவும் பெரிதாயிருந்தது. அதைக் கண்டு தச்சன், மனங்கலங்கி முகங்கடுத்து, இது நல்லவனுக்குக் காலமன்று; துஷ்டர்களுக்குத்தான் காலம் என்று சொல்லி விசனப்பட்டான். அதைக்கண்டு தையற்காரன் நகைத்துத் தான் கொண்டுவந்தவைகளையெல்லாம் இரண்டு பங்காகப் பிரித்து, ஒரு பங்கு தன் தோழனுக்குக் கொடுத்தான். ஏனெனில், "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்றபடி, தன் கையில் ஏது இருந்தாலும் அதை அவன் தன் இஷ்டர்களுக்குக் கொடாதிரான். நாம் சம்பாதித்ததை நாம் செலவிடாமல் வைத்திருந்தாவதென்ன என்பது அவனுடைய முக்கியமான கொள்கை.

பின்பு அவர்கள் இருவரும் அப்பட்டணத்திலிருந்து அப்புறம் போனார்கள். சிறிதுதூரம் போகையில் அங்கே ஒரு பெருங்காடு இருந்தது. அக்காட்டுவழி ஒரு மகாநகரத்துக்குப் போகின்றது;

அக்காட்டில் இரண்டுவழி இருந்தது. அவற்றுள் ஒன்று ஏழுநாளைப் பிரயாணதூரம், மற்றொன்று இரண்டுநாளைப் பிரயாணதூரம். ஆயினும் சமீபமான மார்க்கம் இன்னதென்பது அவர்களுள் ஒருவர்க்காயினும் தெரியாது. அதனால் அவர்கள், இன்னவழியாய்ப் போகிறதென்றும் அதற்காக இத்தனைநாளைக்கு வேண்டிய உணவு சித்தமாய்க் கையில் வாங்கிவைத்துக்கொள்ளுகிறதென்றும் ஆலோசிக்கும்பொருட்டு ஒரு பெரிய ஆலமரத்தடியில் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்து ஆலோசிக்கும்போது எப்போதும் சித்தமாய்க் கையிருப்பு வைத்துக்கொண்டுபோவதே நல்லது; ஆதலால் நான் ஏழு நாளைக்கு வேண்டிய உணவுகளை இப்போதே வாங்கிச் சித்தம்செய்து கொள்கிறேன் என்றான். அதுகேட்டுத் தையற்காரன், ஆ, என்ன! கழுத்தைத் திரும்பிப் பார்க்கவும் கூடாமல் பொதிமாடுபோலச் சோற்றைச் சுமந்துகொண்டுபோகிறதென்று சொல்லுகிறாய்? கற்றுக் கொடுத்த வார்த்தையும் கட்டிக்கொடுத்த சாதமும் எத்தனைநாளைக்குத் தாங்கும்? எனக்கு ஒருபோதும் அப்படிச் செய்ய இஷ்டமில்லை; கடவுளின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் போனோமானால் அவர் விட்டவழியாகிறது. நான் இப்படியேதான் கையை விசிக்கொண்டு வரப்போகிறேன். கையில் காசாகக் கொண்டுபோவோமானால் எந்தவேளைக்கு எது இஷ்டமோ அதை வாங்கிக்கொள்ளலாம். அப்படியின்றிக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு போவோமானால் அது நாளைக்குநாள் ஊசியும் உலர்ந்தும்போகுமல்லவா? அதிருக்கட்டும்; சமீபமான மார்க்கத்தைத் தேடி அதற்கு இரண்டு நாளைக்கு வேண்டிய உணவைமாத்திரம் கொண்டுபோவோமானால் அப்புறம் அதிஷ்டப்படியாகின்றது என்றான். அப்படியே அவர்கள் அவரவர்க்கு இஷ்டமானபடி உணவுவாங்கிக் கட்டிக்கொண்டு தங்கள் பாக்கியத்தைத் தேடிக்கொள்ளும்படி அந்தக் காட்டினிடையே நடந்துபோனார்கள்.

அந்தக் காடு மனிதசஞ்சாரமேயில்லாமல் நிச்சப்தமாயிருந்தது. காற்றோசைகூட உரப்பாய்க் கேட்கவில்லை; நீருவிபாயும் ஓசையும் இல்லை; பறவைகளின் தீங்குரலோசையுமில்லை; மேகமண்டலம்போல அடர்ந்து தரையைக் கவிழ்ந்துகொண்டிருக்கும் அந்தத் தோப்புகளினிடையே சூரியரச்மி சிறிதுகூடத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட பெருங்காட்டுவழியே போகையில் தச்சன் முதுகிலே சுமந்துகொண்டுபோகிற சோற்றுமூட்டையின் சுமையினால் குனிந்த கழுத்தை நிமிர்த்தக்கூடாமல் உரத்து மூச்சுக்கூட விடமாட்டாமல் வாயை மூடிக்கொண்டுபோனான். தையற்காரனோ அப்படியின்றிக் களிப்பும் விளையாட்டுமாகக் குதிப்பதும் சிரிப்பதும், ஆடுவதும் பாடுவதுமாய்க் கொந்தளித்துக்கொண்டுபோனான்; இப்படியே இரண்டுநாளாயின. மூன்றாம்நாளும் அவர்கள் அப்படியே நடந்துபோனார்கள். அப்போதும் அக்காட்டுவழி

மாளவில்லை. முதனுளே தன் கையிலிருந்த உணவெல்லாம் புசித்துச் செலவாய்ப்போனதனுல் தையற்காரனுக்குக் கொஞ்சம் இளைப்பும் அச்சமுமுண்டாயிற்று. ஆயினும் அவன் தைரியத்தைக் கைவிடாமல் தெய்வசங்கற்பப்படியாகிறதென்று கடவுளின்மேலேயே பாரத்தைப்போட்டுச் சந்தோஷமாயே நடந்துபோனுன். அன்று பொழுதுபோய்விட்டது. உண்பதற்கு ஒன்றுமில்லாமல் பசிக்கப் பசிக்க ஒரு மரத்தடியில் இரவெல்லாம் படுத்திருந்து காலையில் எழுந்தான். அன்றையதினமும் அவன் வழக்கம்போலவே தன் தோழனுேடுகூட வழிநடந்துபோனுன். நடுப்பகலில் இருவரும் பாதையோரத்தில் ஒரு மரத்தடியில் உட்காந்தார்கள். தச்சன் தன் சோற்றுமூட்டையை அவிழ்த்துப் பகற்போஜனம் புசிக்க ஆரம்பித்தான். தையற்காரன் என்னசெய்வான்! அவன் சந்தோஷமாய்ப் புசித்துக்கொண்டிருக்க, தன் வயிறு வாடவாட அதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். ஆயினும் பசியினுல் சும்மா இருக்கமாட்டாமல் அவனைப் பார்த்துத் தனக்கு ஒரு கவளம் சோறு கொடுக்கும்படி இரந்துகேட்க, தன் வயிறே பெரிதாகக்கொண்டிருக்கும் அந்தத் தச்சன் அவனைப் பார்த்து நகைத்து, ஐயா, நீர் எப்போதும் களிப்பும் சிரிப்புமாயே இருக்கிறீரே. வருத்தப்படுகிறவர்களுடைய கஷ்டம் இப்படிப்பட்டதென்று உம்முடைய வாழ்நாளில் ஒருநாளைக்காவது உமக்குத் தெரியவேண்டுமல்லவா? அதை இப்பொழுது அனுபவித்துப்பாரும். அதிகமாய்த் துள்ளுகிறவன் உடனே அவதிப்படுவானென்பது நிச்சயம் என்றுன். பலவாறு சொல்லியென்ன? அந்தக் கொடிய தச்சனுக்குத் தன் தோழனிடத்தில் எள்ளளவும் இரக்கம் உண்டாகவில்லை. அன்றையதினம் மெல்ல மெல்ல வழிநடந்துபோய்த் தையற்காரன் இராத்திரி ஓரிடத்தில் தெய்வமே என்று சுருட்டிக்கொண்டிருந்தான். ஐயோ பாவம்! மறுநாள் காலையில் அந்தப் பேதைப்பையன் எழுந்திருக்கப் பார்த்தான்; கால் நிற்கக்கூடவில்லை, கண் சுழலமிட்டது, நா தழதழத்துப் பேசக்கூடாமற்போயிற்று. அதிக இளைப்பினுல் மூர்ச்சைபோனவன்போல் அயர்ந்து கீழேவீழ்ந்தான். அதுகண்டு தச்சன், அப்பா நீ பசியால் மிகவும் களைத்து வருந்துவதுபோலக் காண்கின்றது. அதனுல் இன்றையதினம் உனக்குக் கொஞ்சம் உணவு கொடுக்கும்படி யோசிக்கிறேன். அதற்குப்பதில் உன்னுடைய வலதுகண்ணை எனக்குக் கொடுத்துவிட நீ உடன்படுவாயானுல் இன்று ஒரு வேளைக்கு நான் உனக்கு உணவு கொடுப்பேன் என்றுன்.

ஐயோ பாவம்! அந்தத் துர்ப்பாக்கியனுக்குத் தன் பிராணனிடத்தில் இன்னும் கொஞ்சம் நட்பாசையிருந்ததனுல் அவன் கேட்டதை அங்கீகரியாமல் தீரவில்லை. தெய்வகதி இவ்வளவாவென்று கடைசியாய் ஒருதரம் இரண்டு கண்களாலும் புலம்பிவிட்டு, உன் இஷ்

டப்படியே செய்துகொள்ளப்பாவென்ருன். உடனே கல்லைப்பார்க்கிலும் கொடிய நெஞ்சுடையவஞன தச்சன் ஓர் ஊசியை எடுத்து அந்தப் பேதைமனிதனுடைய வலதுகண்ணைக் கெடுத்துவிட்டான். இத்தருணத்தில் தையற்காரனுக்கு அதிக துக்கம் உண்டாயிற்ருயினும், ஒருநாள் தான் வீட்டிலே புசித்துக்கொண்டிருக்கும்பொழுது, "வினை விதைத்தவன் வினையறுப்பான் தினை விதைத்தவன் தினையறுப்பான்" என்று தன் தாய் சொல்லிய நீதியை நினைத்துக்கொண்டு துக்கந்தெளிந்தான். பின்பு தன் கண்ணுக்குப்பதிலாக அந்தச் சண்டாளன் கொடுத்த கொஞ்சம் உணவைப் புசித்தான். புசித்தபிறகு சற்று எழுந்திருக்கச் சக்தியுண்டாயிற்று. சக்தியுண்டாகவே, ஈசுவரகடாக்ஷத்தால் பார்ப்பதற்கு ஒரு கண்ணுவது மிகுந்திருக்கிறதல்லவாவென்றெண்ணி மனந்தேறி, தனக்கு நேர்ந்த விபத்தை நினையாமல் சந்தோஷமாகவே எழுந்து அப்புறம்போயிஞன். ஆரும்நாள் பசி அவனுக்கு மிகவும் அதிகமாயிற்று. தேகத்தை விட்டு ஜீவன் குதித்தோடிப்போகும்போல் அவ்வளவு ஆயாசமாயிருந்தது. அதனுல் அன்று பொழுதுபோவதற்குமுன்னமே ஒரு மரத்தடியிலே போய்ப் படுத்துப் பசியால் இரவெல்லாம் தூக்கமேவராமல் அல்லாடிஞன்; காலையில் அவனுக்கு எழுந்திருக்கச் சக்தியேயில்லை. அத்தருணங்கண்டு தச்சன், அப்பா உனக்கு மற்றெரு கண்ணைக்கொடுக்க இஷ்டமாஞல் இந்த ஆபத்துவேளையில் உயிரைக் காத்துக்கொள்ளும்படி கொஞ்சம் உணவுகொடுக்கிறேன் என்ருன். அதுகேட்டுத் தையற்காரன், இது நாம் முன்செய்த பாவத்தின் பலனேயொழிய வேறல்லவென்று நினைத்து, உம்முடைய சங்கற்பத்தை மீறி மற்றென்றும் நடப்பதில்லையென்று சுவாமியைத் தியானித்துக்கொண்டு, என் அருமைத் தோழனே! இப்போது இவ்விடத்தில் உன் இஷ்டத்துக்கு எதிர்சொல்வார் ஒருவருமில்லை; என் தலைவிதியை அனுபவிக்க நான் சித்தமாய்க் காத்திருக்கிறேன். ஆயின் ஒன்றுமட்டும் உன் இருதயத்தில் உறுதியாயிருக்கவேண்டும். சர்வேசுவரன் ஒருவன் அவரவர் செய்யும் நன்மைதீமைகள் அனைத்தையும் பொதுவாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிருன்; அவற்றின் பயனை அவரவர் அனுபவிக்கும்படியான காலமும் ஒன்றுவரும். ஆதலால், உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருக்கிற என்னிடத்தில் நடத்துகிற இக்கொடிய செய்கைகளுக்கேற்ற தண்டனையை நீ அனுபவியாமற்போகமாட்டாய். என்னுடைய நல்லகாலத்தில் எனக்குக் கிடைத்தவைகளையெல்லாம் நான் உனக்குப் பாதி பங்கிட்டுக்கொடுத்தேனே! அப்படியிருக்க இப்போது உன் இஷ்டம் வேறுவிதமாயிருந்தால் நான் என்னசெய்வேன்! தையல்வேலை என்னுடைய ஜீவனமென்பது உனக்குத் தெரியுமே. கண் போனபிறகு நான் தைத்துப் பிழைப்பதற்கில்லை; இரந்துதான் வயிறுவளர்க்கவேண்டும். அது என் தலைவிதிப்படியாகிறது. ஆயின் உன்னை ஒன்று

வேண்டிக்கொள்கிறேன்; கண்ணைக் கெடுத்து என்னை இந்நடுக்காட்டிலேயே தள்ளிவிட்டு ஓடிப்போகாதே. போய்விடுவாயானால் நான் இங்கேயேதான் அநாதையாய் இறந்து எடுப்பாரற்ற பிணமாய்ப் போகவேண்டும் என்றான்.

கல்லும் கரையும்படி அவ்வெளிய பையன் இவ்வளவுதூரம் பரிதாபமாய்ப் பேசியும் அத்தனையும் அந்தக் கடுநெஞ்சனிடத்தில் செவிடன்காதிற் சங்கூதினதுபோலாயிற்று. ஈசுவரன் ஒருவன் ஸர்வசாக்ஷியாயிருக்கிறானென்ற எண்ணம் அவன் இருதயத்தில் உதிக்கவேயில்லை. உடனே அவன் ஒரு கத்தியை எடுத்து அப்பேதை மனிதனுடைய இடதுகண்ணையும் கெடுத்துப் பின்பு சிறிதளவு உணவுகொடுத்துப் புசிக்கச்செய்து அப்புறம் அவனைக் கோல்கொடுத்து அழைத்துக்கொண்டுபோனான்.

அன்று மாலைப்பொழுதோடு அப்பெருங்காட்டுவழி மாண்டது. அதைத் தாண்டினவுடனே ஒரு புலத்தில் தூக்குமரமொன்று நாட்டியிருக்கக் கண்டு தச்சன் அந்தக் குருடனைக் கொண்டுபோய் அம்மரத்தடியில் நிறுத்திவிட்டுத் தான் அப்புறம் ஓடிப்போய்விட்டான். ஐயோ பாவம்! சிறிதும் கண்தெரியவில்லையே! அந்த அநாதப் பையன் அங்கிருந்து அப்புறம் எங்கேதான் போகமாட்டுவான்! வழிநடந்துவந்த இளைப்பினாலும் கண்ணைக் குத்தின நோவினாலும் பசியினாலும் நிற்கக்கூடச் சக்தியில்லாமல் அந்தத் தூக்குமரத்தடியிலேயே படுத்து உடனே உடம்புதெரியாமல் தூங்கிப்போனான்; காலைவரையில் எழுந்திருக்கவேயில்லை. சூரியோதயமானபின்பு விழித்துக்கொண்டான். அவனுக்கு அப்போது தானிருக்குமிடம் இன்னதென்று தெரியாது. அந்தத் தூக்குமரத்தின்மேல் இரண்டு குற்றவாளிகள் கட்டித் தொங்குகின்றனர். அவர்கள் ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு காகம் வந்து உட்காந்திருந்தன. அவற்றில் ஒன்று எழுந்து மற்றொன்றைப் பார்த்து, தோழனே! உனக்குத் தூக்கம் தெளிந்ததா என்று கேட்டது. அதற்கு அந்தக் காகம், உனக்கு முன்னமே நான் விழித்துக்கொண்டிருக்கிறேனே என்று சொல்ல, மற்றொன்று, ஆனால் ஒரு செய்தி சொல்லுகிறேன் கேட்கிறாயா? சென்ற இராத்திரி இந்தத் தூக்குமரத்தினின்றும் நம்மேல் விழுந்த பனித்துளிகளைக் கண்தெரியவேண்டுமென்று தன்மேல் தெளித்துக்கொள்ளுகிற அந்தகனுக்கு உடனே கண்தெரியும்; ஆனால் இந்த நுட்பம் ஒருவர்க்கும் தெரியாது. தெரிந்தால், இனி நமக்குக் கண் கிடைக்கப்போகிறதில்லையென்று நிராசைசெய்துவிட்ட அநேகமாயிரம் குருடர்கள் சுகமாய்க் கண்தெரிந்து வாழ்வார்கள் என்று சொல்லிற்று.

இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த குருட்டுச் சிறுவன் உடனே தன் மேலாடையை எடுத்துப் பக்கத்திலிருந்த பனித்

தரையிலே போட்டு, அப்பனிநீர் பட்டு அது நனைந்ததும் அதை எடுத்து அந்நீரால் தன் கண் இமைகளை நன்ருய்த் துடைத்துக் கொண்டான். தீர்க்கதரிசியான காகத்தின் பேச்சு பொய்யாய்ப் போகுமா? உடனே எப்போதும்போல அவனுக்குக் கண் தெளிவாய்த் தெரியலாயிற்று. கிழக்குத்திசையிலே உதயகிரியின்மேல் சூரியன் உதயமாகிவரக் கண்டான்; அவனுக்குச் சிறிதுதூரத்திலே ஆகாயமளாவிய விசித்திரமான கோபுரமண்டப பிராகாரங்களோடு கூடிய மகாநகரமொன்று சூரியகாந்தியினல் தேஜோமயமாய்ப் பளபளவென்று மின்னிக்கொண்டு தோன்றியது; நெடுந்தூரத்து மரங்களிலுள்ள இலை காய் முதலியவைகளும், ஆகாயத்தில் அதிக உயரத்திலே பறக்கின்ற பறவை கொசுகு முதலியவைகளும் அவன் கண்ணுக்குத் தெளிவாய்த் தெரிந்தன. பின்பு அவன் தன் பையிலிருந்து ஊசிநூலை எடுத்து நூலை ஊசிக்காதில் கோக்கப்பார்த்தான்; கோப்பதற்குக் கண் கலக்கமின்றி தெரிந்தது. தெரியவே, அந்தக்ஷணமே ஸாஷ்டாங்கமாய்த் தரையிலே விழ்ந்து, நாதனற்று நடுத்தெருப் பேதையான தன்னை அவ்வளவு கிருபைசெய்து காத்தருளின சுவாமியை வணங்கிப் பலவாறு தோத்திரம்பண்ணினன். பின்பு அந்தத் தூக்குமரத்திலே தொங்குகின்ற இரண்டு குற்றவாளிகளையும் பார்த்து அவர்களையும் காத்தருளும்படிக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு பிறகு தன்னுடைய காலைக்கடன்களைக் கழித்து, தனக்கு நேர்ந்திருந்த துன்பங்களையெல்லாம் சிறிதும் நினைக்காமல் மறந்துவிட்டுப் பழையபடியே சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு அப்பட்டணம்போகப் புறப்பட்டான்.

போம்போது வழியில் முதலிலே ஒரு அழகான குதிரைக் குட்டி அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. யதேச்சையாய்ப் புலங்களில் திரிந்துகொண்டிருந்த அந்தக் குட்டியை இந்தத் தையற்காரன் பிடரியைப் பிடித்து இழுத்துவந்து அப்பட்டணத்துக்குச் சவாரிசெய்துகொண்டு போம்படி அதன்மேல் ஏறப்பார்த்தான். அதுகண்டு அந்தக் குட்டி அவனைப் பார்த்து, பிள்ளாய் நீ என்மேல் ஏருதே. எனக்கு இன்னும் ஒருவர்க்கு வாகனமாம்படியான வயது வரவில்லை. இன்னும் எனக்கு இளமைப்பருவங்கூட மாறவில்லை. ஒரு சிறு குழந்தை ஏறி உட்கார்ந்தாலும் என் முதுகு வளைந்துபோம்போலிருக்கிறது. தக்கவலிமை வருகிறவரையில் என்னை ஒன்றும் வருத்தாமல் விடும்படி வேண்டிக்கொள்கிறேன். இதற்கேற்ற பிரதியுபகாரம் நானும் உனக்கு ஒரு சமயத்தில் செய்வேனேயொழிய செய்யாமற்போகமாட்டேன் என்றது.

அதைக் கேட்டு ஜீவகாருணியமுள்ள அந்தச் சிறுவன் அக்குட்டியினிடத்தில் மனமிரங்கி, நீ இன்னும் விளையாட்டிலேயே கண்ணுயிருக்கிருய்! ஓடிப்போவென்று சொல்லி விட்டுவிட்டான். விட்ட

வுடனே அது நாலுகால் பாய்ச்சலாய் நெடுந்தூரம் ஓடிப்போய் விட்டது.

முதனுள் காலேமுதல் அந்தத் தையற்காரனுக்கு ஆகாரம் ஒன்று மில்லாமையால் இளைப்பு அதிகமாயிற்று. அதனுல் அவன், இப் போது நமக்குக் கண் நன்ருய்த் தெரிகிறதென்பது மெய்தான். வயிறு வாடுகிறதே; இதற்கு என்னசெய்கிறது. இனி நம்மெதிரில் எதுவந்தாலும் அதைப் பிடித்துத் தின்று பசியைத் தணித்துக் கொள்வதே சரியென்று தீர்மானித்துக்கொண்டு அப்புறம் போனுன். அங்கே கருடபக்ஷியொன்று தரையில் நடந்துவந்தது. இவன் மெல் லப்போய் அதைப் பிடித்துக்கொண்டு, ஓ பறவையே! துள்ளிப்போ காதே; நீ புசிக்கத்தக்கவனே அல்லவோ எனக்குத் தெரியாது. ஆயினும் பசி பாவமறியாதாதலால், உன்னை விட்டுவிட என க்கு மனம்வரவில்லை; உன்னைப் பதமாக்கிப் புசித்துவிடுகிறேன் என்ருன். அதைக்கேட்டுப் பக்ஷியானது, பிள்ளாய் நீ அப்படி செய்யலாகாது. நான் ஒரு தேவபக்ஷி; இவ்வுலகில் எனக்குத் தீங்கு நினைத்தவர் எவருமில்லை; மேலும் என்னுல் மனிதர்க்கு மிகுந்த நன் மையுண்டாகிறது. அதனுல் நீ என்னைத் தொந்தரைசெய்யாமல் விட் டுவிடு. சமயம் நேர்ந்தபோது இதற்கேற்ற உபகாரம் நான் உனக்குச் செய்யாமற்போகமாட்டேன் என்றது. அதைக்கேட்டு அந்தச் சிறு வன், ஆனுல் நீ ஓடிப்போ என்ருன். உடனே அது பறந்துபோய்விட் டது. பிறகு தையற்காரன், இந்த அற்பப்பறவையால் நமக்கு என்ன நன்மை உண்டாகப்போகிறது? மேலும் இப்போவோ இன் னும் இரண்டொரு நிமிஷத்திலேயோ நமக்கு பிராணன் போய்விடும் போலிருக்கிறதே! இனி நம் எதிரில் எதுவந்தாலும் அதை விடாமல் பிடித்துத் தின்பதே காரியமென்று தீர்மானித்துக்கொண்டுபோனுன். அருகாமையில் ஒரு குளத்தில் இரண்டு வாத்துக்குஞ்சுகள் நீந்திக் கொண்டிருந்தன; அதைக்கண்டு தையற்காரன் இன்று உங்களையா கடவுள் எனக்கு உணவாக அளித்தார் என்று சொல்லிக்கொண்டு அவற்றுள் ஒன்றைப் பிடித்து முறிக்கப்போனுன். அதுகண்டு அண் டையில் சம்பம்புதரண்டை மறைந்திருந்த தாய்வாத்து கூக்குரலிட் டுக்கொண்டு ஓடிவந்து, ஐயா என் குழந்தையைக் கொல்லாமல் விட்டுவிட வேண்டுகிறேன். உன்னை ஒருவன் பிடித்துக்கொண்டு போய்க் கொல்லப்பார்த்தால் உன் தாய்க்கு எப்படியிருக்கும்? அப் படித்தானே எல்லாருக்குமென்று சொல்லிற்று. அதைக் கேட்டு அந்த ஈரநெஞ்சுள்ள இளைஞன், வீணே ஏன் வருத்தப்படுகிருய்; இதோ உன் குழந்தையை விட்டுவிடுகிறேனென்று சொல்லி அதைத் தண்ணீரில் விட்டுவிட்டான்.

(இன்னும் வரும்.)

## அற்புதமான ஒரு யந்திரம்.

இச்சென்னை பம்பாய் முதலிய இடங்களில் பஞ்சாலைகள் இருப்பதை அநேகர் கண்டும் கேட்டும் இருக்கலாம். அவ்வாலைக்குள் சிறிதும் பதஞ்செய்யாத பஞ்சுகளைக் கொண்டுபோய்ப் போட்டால், அதிக சீக்கிரத்தில் அந்த ஆலை அப்பஞ்சுகளை அழுக்கெடுத்துப் பன்னிப் பட்டையாக்கி நூலாக நூற்றுக் கடைசியில் சிறந்த வஸ்திரங்களாகவும் நெய்துகொடுக்கின்றன.

இப்படிப் பதஞ்செய்யாத பஞ்சைப் புடவைகளாக்குகின்ற பஞ்சாலை எவ்வளவு அற்புதமானது! அதனுடைய விசித்திரங்கள் அதை நேராய்ப்போய்ப் பார்த்தால் தெரியுமேயொழிய மற்றப்படி விளங்கா. ஆயினும் இந்த யந்திரத்தைப் பார்க்கிலும் மிகவும் அற்புதமான மற்றொரு யந்திரம் உண்டு: நீங்கள் அதைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? அது அதிசயமான செய்கைகளைச் செய்கின்றதென்பதுமாத்திரமேயல்ல; அந்த யந்திரமே இந்தப் பஞ்சாலை, இதற்குள் இருக்கும் பொருள்கள் இவை அனைத்தையும் நிருமிக்கின்றது.

மற்றொருவிதமான யந்திரம் உண்டு. அதனுள் பல பழைய கந்தைகளைப் போட்டால், வெகுசீக்கிரத்தில் அவையெல்லாம் அதிக நேர்த்தியான கடிதங்களாக வெளியே வரும். ஆ, இதென்ன ஆச்சரியம் என்று இதைக் கேட்கையில் நீங்கள் மிகவும் வியப்படைவீர்கள். இப்போது நாம் சொல்லப்போகிற மகா யந்திரம் இதினும் அற்புதமானது: அது இந்தக் காகிதயந்திரம் செய்வதைப் பார்க்கிலும் சிறந்த காரியங்கள் செய்கின்றது. அந்த யந்திரம் இல்லாவிட்டால் இந்தக் காகிதயந்திரத்தைச் செய்வதுகூட அசாத்தியமே.

இப்படியே நீராவியின் வலிமையால் அதிக வேகமாய் இருப்புப் பாதைகளின்மேலும், எதனாலும் தடுக்கக்கூடாத அலைகளையும் காற்றையும் எதிர்த்துக்கொண்டு கடலின்மேலும் சுமைகளை இழுத்துக்கொண்டுபோகின்ற யந்திரமொன்றை அனைவரும் அறிவீர்களல்லவா? இப்போது நாம் சொல்லுகின்ற யந்திரங்களுக்கெல்லாம் யந்திரமான மகா யந்திரமோ இந்த நீராவியந்திரங்களை மிகவும் அதிசயித்திருக்கின்றது. அந்த யந்திரத்தினாலேதான் இரும்பு பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு இருப்புப்பாதையாகப் போடப்படுகின்றது. இந்த நீராவியந்திரத்துக்கும் அதுவே தந்தையாம். இப்பூமியில் உள்ள பெரிய நகரங்களெல்லாவற்றிலும் விதம்விதமான மாளிகைகள் எத்தனை இருக்கின்றன! தேவாலயங்கள் சபாமண

டபங்கள் உத்தியோகசாலைகள் பண்டசாலைகள் கடைகள் முதலியவாய்ச் சிறந்த கட்டடங்கள் எத்தனை இருக்கின்றன! அவை யாவும் நாம் சொல்லுகிற மகா யந்திரத்தாலேதான் நிருமிக்கப்பட்டவை.

இவ்வண்ணமே நெடுந்தூரத்தில் ஆறு மலை முதலியவற்றிலுள்ள நீரை நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் கொண்டுவரப் பெரிய வாய்க்கால்களும் குழாய்களும் அந்த மகா யந்திரத்தாலேயே செய்யப்படுகின்றன. அதன் தன்மை எப்படிப்பட்டதென்பீர்களோ? கேளுங்கள்:

இந்த மகா யந்திரம் மற்ற யந்திரங்களைப்போலல்லாமல் தானே இடம்பெயர்ந்து ஓடத்தக்கது. இருப்புப்பாதை நீராவியந்திரமும் இடம்பெயர்ந்து ஓடத்தக்கதேயாயினும் இதற்கும் அதற்கும் அதிக வேற்றுமை உண்டு. நீராவி யந்திரம் இருப்புப்பாதைமேல்மாத்திரமே போகும்; அதிலும் ஒரேமுகமாகமாத்திரமே ஓடும்; பிறருடைய முயற்சியின்றி ஓடாது. நாம் சொல்லுகிற மகா யந்திரமோ எவ்விடத்திலும் எந்தமுகமாகவாயினும் ஓடமாட்டும்; அது பிறருடைய முயற்சியால் அல்ல; அதை உடையவனுடைய இஷ்டப்படியே அந்த யந்திரத்திலுள்ள பல பூட்டுகள் கீல்கள் முதலியவற்றின் உதவியால் தானே வேண்டியபடியெல்லாம் நடக்கும்.

இருப்புப்பாதை வண்டியைக் குறித்தவிடம்போய்ச் சேருவதற்குமுன்னமே நிறுத்தவேண்டும்; இல்லாவிட்டால் அது தானும் அடிபட்டுத் தன்னைச் சேர்ந்த மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் பிரமாதத்தை விளைவிக்கும். தான் இன்னும் சிறிதுதூரம் போம்படி வேறு இருப்புப்பாதையும் அது போட்டுக்கொள்ளமாட்டாது; இருப்புப்பாதை இல்லாமல் தான் ஓரடி நடக்கவும் அதனால் ஆகாது; தண்ணீரில் தான் முழுகிப்போகாதபடி தன்னைக் காத்துக் கொள்ளும்படியான கருவியும் அதற்குக் கிடையாது. அது தெய்வகதியாய் ஆறு கடல்களில் விழுந்துபோமானால் அது அப்படியே அமிழ்ந்துபோகவேண்டுமேயொழிய வெளிவர வேறுவழி இல்லை. நாம் சொல்லுகின்ற மகா யந்திரமோ அப்படிப்பட்டதன்று. அது ஒரு அற்புதமான வல்லமையோடு நிருமிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு உடையவன் அதன் உபயோகத்தைத் தெரிந்துகொள்வானானால், பிறகு அது அவனோடே தண்ணீரில் விழுந்துபோனாலும் பயமில்லை; நீர்மேலேயே மிதக்கும்படி செய்யலாம். அந்நீர்த்தாங்கல் அதி பெரியதாய் இராவிட்டால் அதைக் கடந்து எதிர்க்கரை போய்ச் சேரும்படியாகவும் செய்யக்கூடும்.

இதுமாத்திரமேயல்ல, அதற்கு உடையவன் விரும்பினால் அதன் மேல் உள்ளபொருள் ஒன்றும் சிறிதுகூட நனையாதபடி, அந்நீர்மட்டத்துக்குமேல் சிறிது உயரத்தில் செய்த ஒரு உபாயத்தாலாவது,

அல்லது அந்நீர்மேலேயே மிதக்கும்படி அதனாலேயே செய்யப்பட்ட ஒரு கருவியாலாவது அதைக் கடந்துபோகலாம்.

இந்த அற்புதமான யந்திரத்தில் கண்ணாடியாற்செய்த பலகணி ஒன்று உண்டு. அப்பலகணியின் வழியாய் அதற்குள் இருப்பவன் தனக்குச் சமீபத்தில் நடக்கின்ற காரியங்களைமாத்திரமேயன்றி வெகுதூரத்திலிருக்கின்ற சிலவற்றையும் காண்பான்; அயலாருடைய உட்கருத்தையும் அது அறிவிக்கும். சில விஷயங்களில் அது அநேகமாயிரம் வருஷங்களுக்குமுன் நடந்தவைகளையும் வெளிப்படுத்தும். சிலவேளைகளில் இந்தப் பலகணியிலுள்ள கருவியானது அனைவரும் அதிசயிக்கும்படியான அழகுடையதாகி, அதைப் பெற்றிருப்பவனுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் கொடுக்கும்.

இதுமாத்திரமேயன்றி அந்த யந்திரத்தில் மேளமொன்று உண்டு. அதற்கு ஏற்றவழியாய் யாராவது அதன்மேல் வந்து அடிப்பார்களானால், அதைக் கேட்டு அதன் யஜமானன் பல சங்கதிகளைத் தெரிந்துகொள்ளுகிறான். அந்தச் சங்கதிகளை அதிலுள்ள பலகணியின் மூலமாய்த் தெரிந்துகொள்ள முடியாது. இந்த மேளம் எப்போதும் அடிபட்டுக்கொண்டிருப்பதிலேயே அநேகர் மிகுந்த அபிலாஷையும் விநோதமும் கொண்டிருக்கிறார்கள். இப்படியே அந்த யந்திரத்தில் மற்றொரு கருவியுண்டு. அதன் மூலமாய் அதன் யஜமானன் தன் விருப்பங்களையும், பலகணியினாலும் மேளத்தினாலும் அறிந்த விஷயங்களையும் வெளியிடமாட்டுவான். அதன் யஜமானன் அந்தக் கருவியைத் தக்கபடி செம்மையாய் உபயோகிப்பானானால், அதனால் ஜனங்களுக்கு மிக்க விநோதமுண்டாகும். சில சமயங்களில் ஜனங்கள் மனமுருகிப் புலம்பும்படியாகவும், சில சமயங்களில் அதிக ஆச்சரியமும் களிப்புங்கொண்டு நகைக்கும்படியாகவும் அதனால் செய்யலாகும்.

காகிதயந்திரமானது காகிதம் ஒன்றுதவிர மற்றொன்றைச் செய்ததாய் எவரும் கேள்விப்பட்டதில்லை; இப்படியே ஊசியந்திரமானது ஊசி ஒன்றுதவிர மற்றொன்றைச் செய்ததில்லை; அச்சுயந்திரமும் அச்சுவேலை ஒன்றுதவிர மற்றொன்றைச் செய்ததில்லை; அறுக்கும் யந்திரமும் அறுக்கும் வேலை ஒன்றுதவிர மற்றொன்றும் செய்வதில்லை. நாம் சொல்லுகிற மகா யந்திரமோ அப்படிப்பட்டதன்று; அது செய்யாத வியாபாரம் உலகில் ஒன்றும் இல்லை. காகிதங்களையும் காகித யந்திரங்களையும் அது செய்யமாட்டும்; ஊசிகளையும் ஊசி யந்திரங்களையும் செய்யமாட்டும்; இவ்வண்ணமே அச்சுயந்திரம், அறுப்புயந்திரம் முதலாய எவ்விதமான யந்திரத்தையும் அது செய்ய வல்லமையுடையதாயிருக்கின்றது.

அந்தச் சிறந்த யந்திரம் தானே புத்தகங்களை அச்சிட்டு பயிண்டு செய்யமாட்டும்; மேலும் அனாக்கும், உளாக்கும், தைக்கும், சமைக்

கும், அறுக்கும், நிறுக்கும், கல் அறுக்கும், வில் அடிக்கும், மண் எடுக்கும், வீடுகட்டும், காடுவெட்டும். இப்படியே பலவிதமான வேலைகளையும் இந்த மகா யந்திரம் செய்யமாட்டும். அவ்வேலைகள் அனைத்தையும் ஒரு அட்டவணையாய் இங்கு எடுத்தெழுதப் புகுந்தால் இப்புத்தகத்தில் மற்றொன்றும் எழுத இடமே இராது.

இந்த யந்திரத்தைக் காப்பாற்றி நடத்துகிறவிதம் வெகு விசித்திரமானது. அதை நடத்துவதற்குவேண்டிய பொருள்கள் எப்படிப்பட்டவையானாலும் எந்த வகையானாலும், அவை யாவற்றையும் அந்த யந்திரம் தானே தேடித் தன்னிடத்திலுள்ள அரைக்கும் கருவியொன்றிலே போட்டுக்கொள்ளுகின்றது. அக்கருவி அதை நன்றாக நசுக்கி உள்ளே தள்ளுகின்றது. பிறகு அது அதற்குள்ளிருக்கும் ஒரு தொட்டியிலே போய் விழுந்து அங்கேயே சிறிதுநேரம் இருந்து நன்றாக நைந்து நீரோடு கலக்கப்படுகின்றது. பின்பு அங்கிருந்து பலவிடங்களுக்குப்போய்ப் பலவிதமாக மாறுபட்டுக் கடைசியில் அநேகம் குழாய்களில் தள்ளப்பட்டு அதன்மூலமாய் அந்த மகா யந்திரத்தின் எந்தப்புறமும் செல்லுகின்றது. இந்தக் காரியங்களெல்லாம் இப்படியே விடாமல் நடந்து அடிக்கடி புதிது புதிதாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறவனாயில் அந்த யந்திரமும் உழைக்குந்தன்மை உடையதாய் இருக்கும்.

இந்த யந்திரம் நாள்தோறும் சிறிதுநேரம் வேலையின்றி விடாய் ஆறியிருக்கும்படி செய்யவேண்டும். இல்லாவிட்டால் அதிக சீக்கிரத்தில் அழிந்துபோம். சில சமயங்களில் தகாதபொருள்களை அதற்குள் போடுவதனாலும் அதற்குரிய விதிகளை மீறி நடப்பதாலும் அந்த யந்திரம் ஒழுங்குதப்பிப்போவது உண்டு. இந்த யந்திரம் நூறுவருஷங்களுக்கும் அதிககாலம் நீடித்திருந்ததற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. ஆயினும் இரண்டொரு மணிநேரத்துக்குள்ளேயே அநேகம் அழிந்துபோகவும் கண்டிருக்கிறோம்.

இவ்வளவும் அந்த யந்திரத்தை நாம் ஒருவாறு விளக்கியதேயன்றி அதன் குணங்களை முற்றும் எடுத்துரைத்ததன்று. அதேவிதமான யந்திரம் எனக்கும் ஒன்று உண்டு; இவ்விதமாகவே எல்லோர்க்கும் உண்டு. இந்த யந்திரந்தான் சரீரமென்னப்படுவது. அதை உபேக்ஷைசெய்யாமல் கருத்தாய்க் காத்து அதைத் தக்கபடி சரியானவழியில் உபயோகித்து வருபவர்களுக்கு எக்காலத்திலும் எவ்விதமான துன்பமும் நேரிடாது. இப்படி எல்லாக் காரியங்களுக்கும் உபயோகமான மகா யந்திரத்தைத் தந்து நம்மைக் கருணையுடன் காத்தருளுகின்ற தயாநிதியான தேவதேவனை நாம் என்றும் மறவாமல் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, நீதி நன்னெறி பூததயை பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்களுள்ளவர்களாக வாழ்ந்திருக்கக் கடவோம்.

## சென்ற டிசம்பர்மாசம் 31உ உண்டாகிய பூகம்பம்.

இந்தப் பூகம்பத்தைப்பற்றிச் சென்ற இரண்டு சஞ்சிகைகளில் நாம் சொற்பமாய் எழுதியிருக்கிறோமல்லவா? இந்தப் பூகம்பம் அதிக உக்கிரமாய் இருந்ததென்று சிலர் சொல்லுகின்றனர். யோசிக்கையில் இது அவ்வளவு உக்கிரமானதாகத் தோன்றவில்லை. லிஸ்பன், பெருமுதலான விடங்களில் முன் உண்டானதாகப் புத்தகங்களில் படித்திருக்கிறோமே; அப்படி இருப்பதல்லவோ பூகம்பம். அப்போது இரண்டொரு நிமிஷத்தில் அநேகமாயிரம் பிரஜைகள் மாண்டுபோனார்களே! அப்படிப்பட்டது ஒன்றும் இங்கு உண்டாகவில்லையாதலால் இது பூகம்பமேயல்லவென்றுகூடச் சிலர் கூறுகின்றனர். ஆயினும் பூமியின் சொற்பமான அதிர்ச்சிகூட இத்தேசத்திலே இதுவரையில் உண்டானதில்லையாதலால், இப்போது உண்டான சொற்ப அதிர்ச்சியும் நமக்கு ஒரு அதிசயமேயொழியச் சாதாரணமானதன்று. இச்சிறு பூகம்பம் இவ்விந்தியாவின் மேற்கே கள்ளிக்கோட்டை தொடங்கிக் கிழக்குச் சமுத்திரத்தில் அந்தமான் தீவுவரைக்கும், வடக்கே நேபாளதேசத்திலுள்ள காட்மாண்டு நகரம்முதல் தக்ஷிணசமுத்திரத்திலிருக்கும் மௌண்டு ஸ்டுயேர்ட்டு கப்பல்வரைக்கும் நன்றாய்ப் புலப்பட்டது. இவற்றின் தூரத்தை யோசிக்கையில், கள்ளிக்கோட்டைமுதல் அந்தமான் தீவுவரைக்கும் சுமார் 1300 மைல் தூரம்; காட்மாண்டுமுதல் மௌண்டு ஸ்டுயேர்ட்டுவரைக்கும் தூரம் 1600 மைலுக்கு அதிகமாகின்றது. இப்பூகம்பம் இலங்கைத்தீவு, சென்னை ராஜதானி, பங்காள ராஜதானி இவ்விடங்களில் முழுதும் நன்றாய்த் தெரிந்தது. பம்பாய் ராஜதானியில்மட்டும் இல்லை. இதெப்படியானாலும், பர்மாவிலுள்ள ரங்கூன் நகரத்தில் இது புலப்படவில்லையென்பதைக் கேட்க மிகவும் ஆச்சரியமாகின்றது. ஏனெனில், இந்தப் பூகம்பத்திற்குப் பிறப்பிடமாக எண்ணப்படுகிற எரிமலைத்தொடரிலிருந்து மேற்கே 800 மைல் தூரத்துக்கு அப்பாலுள்ள இச்சென்னையில் தோன்றியிருக்க, கிழக்கே 300 மைல் தூரத்திலுள்ள ரங்கூனில் தோன்றாதிருப்பது அதிசயமேயல்லவா?

இந்தப் பூகம்பம் கிழக்கிலிருந்து மேற்கே போனதாகச் சிலர் சொல்லுகின்றனர்; வேறுசிலர் தெற்கிலிருந்து வடக்கே போனதாகச் சொல்லுகின்றனர். இது இலங்கைத் தீவிலும், இவ்விந்தியாவின் தென்புறத்து மேலண்டைக் கரையோரத்திலும் வெகு நன்றாய் உணரப்பட்டது. தென்கிழக்கிலிருந்து வடமேற்கே போனதாகக் கல்கத்தாவில் தோன்றியது. தப்பு முனையில் தெற்கிலிருந்து வடக்கே போனதாகச் சொல்லுகிறார்கள்; கோபாலபுரத்தில் வடக்குமுக

மாய்ப் போனதாகத் தெரியவருகிறது. இச்சென்னையிலோ வடக்கு அல்லது வடகிழக்கிலிருந்து தெற்கே போகக்கண்டோம். அந்தமான் தீவில் வடக்கிலிருந்து தென்மேற்கே போனதாகக் கூறுகின்றனர். இப்படியே அங்கங்குள்ளவர்கள் தத்தமக்குத் தோன்றியபடி பலவிதமாய்ச் சொல்லுகின்றனர். ஆனால் நிகொபார் தீவுக்குக் கிழக்கிலும் பூமத்தியரேகைக்குத் தெற்கிலும் இது எப்படி இருந்ததோ அதைப்பற்றிமாத்திரம் ஒன்றும் தெரியவில்லை.

பூகம்பம் தோன்றின காலத்தைப்பற்றி யோசித்தால் அதுவும் எங்கும் ஒருதன்மையாயிருந்ததாகத் தோன்றவில்லை. பலவிடங்களில் பலவிதமாய்ச் சொல்லுகின்றனர். ஆனால் இது, காலவளவைக் குறிக்கும் கருவி எங்கும் ஒருதன்மையாய் இல்லாமையாலும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் எல்லாம் காலை எழுமணிமுதல் எட்டு மணிக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது. அந்த அதிர்ச்சி நீடித்திருந்த காலத்தினளவும் ஒருவிதமாய் இல்லை. ஹஜாரிபாவில் சில செக்கண்டுமாத்திரமே இருந்தது; கல்கத்தாவில் நாலரை நிமிஷம் இருந்தது; கடகபுரத்தில் 5 நிமிஷம்; பால்கோநாட்டில் 3 அல்லது 4 நிமிஷம்; இச்சென்னையில் 4 நிமிஷம்; புதுச்சேரியில் ஓரே நிமிஷம்; மௌண்டு ஸ்டுயர்ட்டு நின்றவிடத்தில் 3 நிமிஷம். இப்படியே அங்கங்கே வெவ்வேறளவாயிருந்ததாகச் சொல்லுகின்றனர்.

இந்தப் பூகம்பம் அத்தனை உக்கிரமானதல்லவாயினும் இச்சென்னைக்குமட்டும் ஓர் அதிசயமானதுதானென்று சொல்லியது மெய்யே. அப்போது இங்கே அநேகம் பெரிய தேவாலயங்களில் துவஜஸ்தம்பம் முதலியவைகள் கலகலவென்று ஆடின. இச்சென்னையில் கடலோரத்தில் சிலநாளைக்குமுன்னேதான் நூதனமாய்க் கட்டப்பட்ட பிரசித்தமான பெரிய கட்டடமாகிய சகலகலாசாலைத்தலைவர்களின் மந்திராலோசனைச் சபை (Senate House) வெகுவாக பின்னப்பட்டு இரண்டோரிடம் பழுதுபார்க்கும்படியாகக்கூட நேரிட்டது. அப்படியே அதன் பத்திரத்துக்காகச் செப்பனிடவும் தொடங்கியிருக்கின்றனர்; மற்றொரு பெரிய வைத்தியசாலை வெடிப்புண்டது; சாதாரணமான கட்டடங்களும் அநேகம் சேதப்பட்டன. இலங்கைத்தீவிலும் இப்படியே நேரிட்டது. ஆலயங்களின் சுவர்கள் அநேகம் வெடித்தன; சில வெடித்து வீழ்ந்துகூடப்போயின. பங்காளக் குடாக்கடலிலுள்ள தீவுகளில் இன்னும் அதிகமான சேதங்கள் உண்டாயின. ஆயினும் முன் தேசாந்தரங்களில் உண்டான சேதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இது ஒரு கெடுதியல்லவென்றே சொல்லவேண்டும்.

பூகம்பம் உண்டாகும் காரணங்களை நாம் இங்கு எழுதவேண்டிய அவசியமில்லை. இப்பூகோளத்தின் வயிற்றிலே ஓயாமல் அக்

கினி எரிந்துகொண்டிருக்கிறதென்றும், அதன் செயலால் அங்குள்ள கல் மண் முதலியவெல்லாம் திரவமாய்ப் பொங்கிக்கொண்டிருக்கின்றனவென்றும், ஒவ்வொரு காலங்களில் அது மேலெழுந்து எரிமலைகளின் வாய்வழியாகப் பொங்கி வழிவதும், அப்போது அதற்கு அடுத்தவிடங்களில் பூமியதிர்ந்து குலுங்குவதுமாகிறதென்றும் முன் எழுதிய பூகம்பம் எரிமலையென்னும் புத்தகத்தில் தெளிவாகும். அப்படிப்பட்ட காரணம் இப்போது எங்கேயாவது உண்டாயிற்றாவென்று யோசிக்கையில், கிழக்கு மகாசமுத்திரத்திலுள்ள மணிலாவென்னும் தீவிலே ஓர் எரிமலை எரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவந்தது. அதனாலேயே இப்பூகம்பம் உண்டானதாகத் தோன்றவில்லையாயினும், அவ்வெரிமலை பொங்கும்படி அம்மலைத்தொடரையடுத்த பூமியில் ஒரு கொதிப்பு உண்டாயிருப்பதாகத் தெளிவாகின்றதனால், அக்கொதிப்பினாலேயே இந்தப் பூகம்பம் உண்டாயிற்றெனத் தோன்றுகிறது. இதனால் பகல்பூரில் டிசம்பர் மீ 10உ. 31உ களிலும், ஜனவரி மீ 5உயிலும் அதிர்ச்சியுண்டாயிற்றாம். காட்மாண்டுநகரத்திலும் அவ்விதமாகவே தோன்றியதாம். அப்படியே கல்கத்தாவில் ஜனவரி மீ 1உ இரண்டு அதிர்ச்சியுண்டாயிற்றென்கிறார்கள். அந்தமான்தீவில் ஜனவரி மீ 2உயிலும் ஓர் அதிர்ச்சியுண்டானதாகச் சொல்லுகின்றனர்.

கிழக்கு மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளில் பெரிய எரிமலைத்தொடர் ஒன்று இருப்பதாகச் சொல்லுகின்றனர். ராம்ரீ, சடுபா என்பவை அவற்றிற்கு ஆரம்பமாம். அதையடுத்த ஆரக்கான்கரையோரத்திலும் எரிமலைகள் இருக்கின்றன. அதனால் சிட்டகாங்பட்டணத்தில் அடிக்கடி பூகம்பங்கள் உண்டாகின்றன. அவற்றுள் 1762-ஆண்டிலும், 1833-ஆண்டிலும் உண்டானவை மிகவும் முக்கியமாம். அந்த எரிமலைத்தொடர் பிறகு அங்கிருந்து தென்கிழக்காய்த் திரும்பி சுமாத்ராதீவு வழியாய் ஓடுகின்றது. அந்தத் தீவிலே நான்கு எரிமலைகளுக்குக் குறைவில்லை. பின்பு அது கிழக்குமுகமாய்த் திரும்பி ஜாவா, மொலாக்காதீவுகளின் வழியாய் ஓடுகின்றது. பிறகு அங்கிருந்து நேராய் வடக்கே திரும்பிப் பிலிப்பைன்தீவின்மேல் ஓடுகின்றது. இவற்றிலும் இவைகளையடுத்த தீவுகளிலும் எரிமலைகள் அநேகமிருக்கின்றனவாம். இவ்வாசியாகண்டத்துக்குத் தென்கிழக்கிலே கூட்டமாயிருக்கின்ற தீவுகளில் 50க்கு அதிகமான எரிமலைகளிருக்கின்றன. இவற்றையெல்லாம் யோசிக்கையில் அதன் காரணத்தினாலே இந்தச் சிறு பூகம்பம் உண்டாயிற்றெனத் தோன்றுகிறது. நமது இந்து தேசத்தில் அப்படிப்பட்ட எரிமலையொன்று இல்லாமலிருப்பது நம்முடைய பாக்கியவிசேஷமே.

## சிறுவர்க்கானகதை.

### ஒரு வில்லிமகள். (தொடர்ச்சி.)

ஒரு தேவகன்னிகையினல் வளர்க்கப்பட்டு நடுக்காட்டிலே கிடந்த ஒரு வில்லியின் மகளை ராஜகுமாரன் ஒருவன் கண்டு தன் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்க் கலியாணம் செய்துகொண்டானென்று சொன்னேமே. கலியாணமானபின்பு அம்மகள் சுகமாய் அங்கேயே இரண்டொரு வருஷகாலம் வாழ்ந்துகொண்டிருந்தாள். அப்போது அவள் வயிற்றில் ஆண்குழந்தையொன்று பிறந்தது. பிள்ளைபெற்ற வருத்தத்தால் அவள் பிரஞ்ஞையில்லாமல் படுத்திருக்கையில், அன்று இராத்திரி அவளை எடுத்துவளர்த்த தெய்வப்பெண் அவளண்டை வந்து, பெண்ணே! இப்பொழுதாவது நீ உண்மையை உரைப்பாயா? நான் வேண்டாமென்று மறுத்த மாளிகையின் கதவை நீ திறந்தது உண்டா இல்லையா? உண்மையைச் சொல்வாயானல் நான் உன்னைப் பேசும்படி செய்வேன்; இல்லாவிட்டால் இந்தக் குழந்தையையும் நான் உடனே தூக்கிக்கொண்டு போய்விடுவேன் என்றாள்.

அப்போது தேவகன்னிகைக்குப் பதில் சொல்லமாத்திரம் அம்மகளுக்கு வாய் உண்டாயிற்று. ஆயினும் அவள் மனம் பொய் சொல்லித் திடப்பட்டுப்போனபடியால், அப்போதும் நான் திறக்கவில்லையென்றே மறுமொழி கூறினள். அதைக் கேட்டவுடனே தெய்வப்பெண் அவள் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு மறைந்துபோய்விட்டாள்.

மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது அவ்வரசியின் பக்கத்தில் அவள் பெற்ற பிள்ளை காணமற்போகவே அப்பட்டணமெல்லாம் ஒரு பெருங்கூச்சலாயிற்று. அந்த ராணி ஒரு பெருங் கொலையாளி; பெற்ற பிள்ளையையே கொன்றவள் மற்றெதற்கு அஞ்சுவாளென்று சொல்லி அனைவரும் அவள்மேல் குற்றம்சார்த்தினர்கள். இவற்றையெல்லாம் அவள் கேட்டுக்கொண்டிருந்தாளாயினும் அதற்கு ஒன்றும் பதில் சொல்ல வாயில்லாமல் மிகவும் வருந்தி நின்றாள். ஆனாலும் அரசன்மாத்திரம் அவளிடத்தில் அதிக அன்பு வைத்திருந்ததனல், ஜனங்கள் சொன்ன அபவாதத்தைச் சிறிதும் காதில் ஏற்றுக்கொள்ளாமல் அவன் முன்போல அவளை அருமையாகவே ஆதரித்துவந்தான்.

இப்படியே இரண்டொரு வருஷகாலம் சென்றது. மறுபடியும் அம்மகள் கர்ப்பம் தரித்து மற்றொரு ஆண்குழந்தையைப் பெற்றாள். அன்று இராத்திரியும் முன்போலவே அவளை எடுத்து வளர்த்த தெய்வகன்னிகை அவ்விடத்துக்கு வந்து, பெண்ணே, உண்மைபேசுகிறவர்களுக்கு ஒருபோதும் அழிவில்லை. இப்பொழுதாவது நீ செய்த காரியத்தை உண்டென்று ஒப்புக்கொள்வாயா?

உண்மையைச் சொல்வாயானால் எப்போதும்போல் உன்னைப் பேசப்பண்ணுவதுமன்றி, நான் கொண்டுபோன உன் மகனையும் திரும்பிக் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன். இல்லாவிட்டால் இப்போது இந்தக் குழந்தையையும் உடனே எடுத்துக்கொண்டு போய்விடுவேன் என்றாள்.

அவ்விளவரசி மிகுந்த நெஞ்சுறுதிகொண்டவளாகி அப்போதும் நான் ஒன்றும் செய்யவில்லையென்று பொய்ப்பேச்சே பேசினதுகேட்டுத் தேவகன்னிகை அந்தக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு போய்விட்டாள்.

மறுநாள் காலையில் அங்கே வந்து பார்க்கக் குழந்தையைக் காணாமற்போகவே, இளவரசியே அந்தக் குழந்தையையும் கொன்றாளென்று அப்பட்டணத்து ஜனங்களெல்லாம் அவள்மேல் பகிரங்கமாய்க் குற்றம்சார்த்தினார்கள். ராஜாவினுடைய மந்திரிகளும் அவளைக் குற்றவாளியாக விசாரணை செய்யவேண்டுவதுதான் எனத் தீர்மானித்தார்கள். ஆயினும் அரசன் அவளிடத்தில் இருந்த அதிக நேசத்தினால் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி இன்னும் சில நாள் பொறுத்து யோசிப்போமென்று கருதி, அம்மனைவியினிடத்தில் மனம் மாறாமல் முன்போலவே நடந்துவந்தான்.

அப்படியே இரண்டொரு வருஷம் சென்றது. மறுபடியும் அவ்விளவரசி ஒரு பெண்குழந்தையைப் பெற்றாள். அன்றிராத்திரியும் முன்போலவே தேவகன்னிகை அவ்விடத்துக்கு வந்து அவ்வரசியைக் கைபிடித்துத் தேவலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போய், அங்கே தான் வளர்த்துவரும் அவளுடைய மூத்தமக்கள் இருவரையும் காட்டினாள். அங்கே அம்மக்கள் களித்து விளையாடிக் கொண்டிருப்பதை அவ்விளவரசி கண்டு மிகவும் அகமகிழ்ந்திருந்தாள். அப்போது தேவகன்னிகை அவளைப்பார்த்து, இப்பொழுதாவது உன் மனம் தளர்ந்திருக்கிறதா? இனியாவது உண்மையைச் சொல்வாயானால் உன்னுடைய இரண்டு அருமைப் பிள்ளைகளையும் கொடுத்து உனக்குப் பேசவும் வல்லமை உண்டாக்குகிறேன்; இல்லாவிட்டால் நீ இப்படியே அழிந்துபோகவேண்டுவதுதான் என்று சொன்னாள்.

தேவகன்னிகை அவ்வளவு சமாதானப்படுத்திக் கேட்கையிலும் அவ்விளவரசி ஒரே பிடியாய், நான் அந்த மாளிகையைத் திறந்ததேயில்லை என்றாள். அப்பேச்சு வாயிலிருந்து வெளிவருவதற்கு முன்னமே அச்சிறுமி அத்தேவலோகத்தினின்றும் இப்பூமியிலே வந்துவீழ்ந்தாள். அவளுடைய மூன்றாவது குழந்தையும் காணாமற்போயிற்று. மறுநாள் இந்தச் செய்தியும் வெளியே பிரசித்தமாக அதைக் கேட்டு அந்நகரத்தார், மற்றுமுள்ள ஆலோசனைத் தலைவர் முதலிய யாவரும், இவ்விளவரசி கொலைக்கஞ்சாத கொடும்பாவியென்பதற்குச் சந்தேகமில்லை. இனி இவளைத் தக்கபடி தண்டிக்

காமல் விடுவது நியாயமல்லவென்றார்கள். மூன்றுதரமும் சோதித்தாயிற்றுதலால் இந்தத் தடவை அரசன் ஒன்றும் அவளுக்கும் பக்கபலம் பேசுவதற்கில்லை. அதனால் அவ்வருமை மனைவியை அம்பலத்திலே கொண்டு நிறுத்தி விசாரிக்கலானான். விசாரிக்கும் போது அம்மகள் வாய்திறந்து ஒன்றும் பேசமாட்டாமல் நின்றதனால், அவள் குற்றவாளியேயெனத் தீர்மானித்து, பெருந்தீவளர்த்தி அதிலே அவளைத் தள்ளிவிடுகிறதென்று நிச்சயித்தார்கள். அப்படியே பிரசித்தமான ஓரிடத்தில் கட்டைகள் போட்டு அடுக்கி அதன் மத்தியில் ஒரு ஸ்தம்பத்திலே அவளைக் கட்டிச் சுற்றிலும் நெருப்புவைத்துவிட்டார்கள். அந்தத் தீயானது மேலே உறைத்த பிறகுதான் அவளுடைய கல்நெஞ்சு கனைந்தது. ஆ! நாம் இப்படித் தீக்கு இரையாய்ப் போம்படியா நேரிட்டது! நாம் உண்மையை ஒளித்ததனாலல்லவா இப்படியாயிற்று! தேவலோகத்து மாளிகையைத் திறந்ததாக இனி ஒப்புக்கொள்வதனால் ஏதாவது நன்மை உண்டாகுமா என்று நினைத்தாள். அப்படி நினைத்த நிமிஷமே அவளுக்குப் பேச வாயுண்டாயிற்று. ஓ, என்னை எடுத்தாதரித்த உத்தமியே! அந்தக் கதவை நான் திறந்ததுண்டென்று உறுதியாய் ஒப்புக்கொள்கிறேன்; அவ்விஷயத்தில் நான் இத்தனைநாளாகத் தெரியாமையால் செய்த பெரும்பிழையைப் பொறுக்கவேண்டும் என்று கூவிப் புலம்பினாள்.

அந்தக்ஷணமே ஆகாயத்தினின்றும் பெருமழை பொழிந்து அந்தத் தீ அவிந்துபோயிற்று. உடனே ஒரு பெருஞ்சோதி தோன்றத் தேவகன்னிகை தான் கொண்டுபோன இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு பூலோகத்துக்கு வந்து அக்குழந்தைகளைத் தாயின் கையிற்கொடுத்து, நன்றாய்ப் பேசும்படியான திறமையும் அவளுக்கு உண்டாக்கி, அவளுக்கு அநேகம் மங்களங்கள் உண்டாகக்கடவனவென்று ஆசீர்வதித்தாள். அப்போது அங்கே வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களெல்லாம் இதென்ன ஆச்சரியமென்று சொல்லி அதைக் கண்டு வியந்தார்கள். கடைசியாய் அந்தத் தேவகன்னிகை தான் அருமையாய் எடுத்துவளர்த்த அவ்விளவரசியைப் பார்த்து, இனிமேல் நீ இப்படிப்பட்ட பிடிவாதம் ஒன்றும் செய்யாமல் உண்மையாக நடக்கக்கடவாய். ஆனால் எப்படிப்பட்ட பிழைசெய்தவர்களாயினும், பின்பு அதைப்பற்றி அனுதாபமுண்டானால் அப்பிழை மன்னிக்கலாகுமென்று சொல்லி ஆசீர்வதித்துவிட்டுத் தேவலோகம்போய்ச் சேர்ந்தாள். இளவரசனும் அதிக சந்தோஷமடைந்து அம்மகளுடைய நற்குணத்துக்காக அவளை மிகவும் கொண்டாடிப் பின்பு நெடுங்காலம் அவளோடு கூடச் சீராய் அரசாட்சி செலுத்திவந்தான்.

## சமாசாரம்.

**நம்முடைய மகாராணியார்:**-விக்டோரியா மகாராணியவர்கள் விண்ட்ஸர்காஸ்ஸில் என்னும் அரண்மனைக்குப் போம்படி வண்டியேறப்போகிற தருணத்தில் ஒருவன் அவர்மேல் குறிவைத்து அவரைத் துப்பாக்கியால் சுடும்படி வண்டிக்கு நேராக ஒரு வெடிதீர்த்தான்; ஆயினும் தெய்வகடாக்ஷத்தால் அந்த குண்டு மேலேபடாமல் மகாராணியார் தப்பிப்பிழைத்தார். அப்படிச் சுட்டவனுன துஷ்டனுக்கு மக்லீன் என்று பெயர். உடனே அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அவன் உத்தியோகம் ஒன்றும் இல்லாதவன். விசாரித்ததில், அவ்ன் சித்தப்பிரமையுடையவன் என்றார்கள். அவன் சுட்டகாலத்தில் பக்கத்திலிருந்தவர்கள் அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவனுடைய ஆவேசத்தை நிறுத்த முயலாதிருப்பார்களானல், அவன் பின்னும் பலதரம் வெடிதீர்த்திருப்பான். அவனைப் பின்பு பிடித்து அடக்கப் போலீசு உத்தியோகஸ்தர்களுக்கும் அசாத்தியமாயிருந்தது. அவனுடைய விதி எப்படியாவது ஆகட்டும். மகாராணியாரவர்கள் இந்த ஆபத்திஞல் சிறிதும் மனோதைரியம் குன்றாதவராகிச் சாதாரணமாகவே தாம் உத்தேசித்த இடத்துக்குச் சென்றார்கள். இந்தக் கொடிய கைதி விசாரணையிலிருக்கிறான்.

**புகைகூண்டு:**—நாளது மாதத்தில் சீமையில் இரண்டுபேர் கும்மட்டம் கட்டி அதன்மேல் ஏறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு, அதற்கு எதிரிலுள்ள பிராஞ்சுதேசத்திற்குப் போவதாகப் புறப்பட்டார்கள். அவர்கள் உத்தேசப்படியே ஆகாயத்தில் எழும்பி நெடுந்தூரம் சென்றார்களாயினும், பிராஞ்சுதேசத்துக்குச் சமீபத்தில் கடலிலே வீழ்ந்து போனார்கள்.

**ஒலிகாட்டிக்கருவி:**—ஒலிகாட்டிக்கருவி என்னும் விசித்திரமான ஒரு யந்திரத்தின் மூலமாய் நெடுந்தூரம் பேச்சினலேயே செய்தி போக்குவரவு செய்விப்பதற்கு ஒரு சங்கம் ஏற்பட்டிருப்பதாக முன்னமே சொல்லியிருக்கிறோமே; இப்போது அதை இச்சென்னையில் நடத்திவருகிறார்கள். வேண்டியவர்கள் போய்ப் பார்க்கலாம்.

**ஜனத்தொகைக் கணக்கு:**-இவ்விந்தியாவில் இப்போது எடுக்கப் புகுந்திருக்கும் குடித்தொகைக் கணக்கு வெகுவாக முடிவுபெற்றுவருகிறது. இதற்குச் செலவு மொத்தம் ரூபாய் பதினெட்டரை லக்ஷமாகும் என்கிறார்கள். குடித்தொகை மொத்தம் 25,20,00,000 ஆகின்றது.

**ஜயபுரத்து மகாராஜா:**—தான் கல்கத்தாவுக்குப் போய் வந்ததற்கு அறிகுறியாய், இம்மகாராஜா தம்முடைய ராஜதானியில் திராம்வே என்னும் வண்டி ஏற்படுத்தும்படி உத்தேசித்திருக்கிறார்.

**காபூல்தேசத்து அமீர்:**—ஆப்கானிஸ்தானத்தில் இப்போது புதிதாய் ஏற்பட்டிருக்கும் அமீர், தாம் நேராய் நமது கவர்னர்ஜனரல் அவர்களைக் காணும்படி இவ்விந்தியாவுக்குவர உத்தேசித்திருக்கிறாராம்; அப்படி அவர் வரும் பக்ஷத்தில் அவரை எதிர்கொண்டு அழைக்கும்படி, லாகோர் பட்டணத்தில் ஒரு சபை சேர்க்கப்படுமோம். வழியிலே மற்றவிடங்களிலும் அவருக்கு மரியாதைசெய்ய நினைத்திருக்கிறார்கள்.

C. K. S. Press, Vepery, Madras, 1882.